அருள் தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாய்

மலர் : 5 இதழ் : 12 டிசம்பர் – 2014 (தனிச்சுற்றுக்கு மட்டும்)
thirukkalyanamatha.com



# பிறந்தார் மீட்பர்..!

# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230

kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்

பேரருட்திரு. முனைவர். R. **ஜோசப் ரவிபாலன்**

**ஆலோசகர் குழு**

அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட்திரு. ஜோசப் ஸ்டார்லின்
அருட்திரு. ஜோசப் பாக்கியராஜா
அருட்சகோதரி. புளோரா

**ஆசிரியர் குழு**

அருட்திரு. பிரான்சிஸ் வசந்தன்
அருட் சகோதரி. மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

**தொடர்பு முகவரி**

திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230

**விளம்பரம் செய்ய தொடர்புக்கு...**

திருத்தலக்கடை : 04639 -261330
திருத்தல அலுவலகம் : 04639 -261430

## மலரின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| திருப்பாடல்கள் 4 | 4 |
| மூலைக்கல் | 7 |
| திருவிழா நிகழ்வு அட்டவணை | 10 |
| திருச்சபை செய்திகள் | 12 |
| புனித சிலுவை அருளப்பர் | 18 |
| அற்புதங்கள் சாட்சிகள் | 19 |
| கவிதைச் சோலை | 20 |
| எனது கிராமம் | 23 |
| ...சீயோனாக மாறுவோம் | 27 |
| இல்லத்தில் இடமுண்டு | 31 |
| மீட்பரின் நற்செய்தி | 34 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 39 |
| திருவிவிலியம் நமது செல்வம் | 40 |

வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

# ஆசிரியரின் அருளுரை



இயேசுவில் அன்புக்குரியவர்களே! திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே! உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்களை திருக்கல்யாணத் தாய் மாத இதழ் சார்பாகத் தெரிவித்துக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கிறிஸ்துவின் பிறப்பு விழாவைக் கொண்டாடத் தயாராகிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், அவரது பிறப்பின் இரகசியம் குறித்துச் சிந்திப்பது நல்லது. கிறிஸ்தவப் பாரம்பரியம் இயேசு பெத்லகேமில் மாட்டுத் தொழுவம் ஒன்றில் பிறந்தார் என்கிறது.ஆனால் அவர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார் என்பதற்கு நேரடி ஆதாரம் எதுவும் புதிய ஏற்பாட்டில் இல்லை என்பதுதான் உண்மை. இயேசு பெத்லகேமுக்கு வெளியே இருந்த ஒரு குகையில் பிறந்தார் என்று இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மறைசாட்சியான யுஸ்தின்(Justin AD 103-165) கூறுகின்றனர். கி.பி. 150ஆம் ஆண்டிற்கும் 300ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் எழுதப்பட்டுள்ள யாக்கோபுவின் புத்தகம் என்றும், யாக்கோபுவின் முதல் நற்செய்தி என்றும் அழைக்கப்படும் நூலில் பெத்லகேமுக்கு மிக அருகிலுள்ள குகையொன்றில் இயேசு பிறந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது.விடுதியில் இடம் கிடைக்காததால்,மரியா குழந்தை இயேசுவைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தியதாக லூக்கா குறிப்பிடுகிறார் (லூக் 2:7). அதாவது, யோசேப்பும், மரியாவும் பெத்லகேமில் இருந்த விடுதிகளில் தங்குவதற்கு இடம் தேடியதாகவும், விடுதிகளில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்ததால் அங்கு இடம் கிடைக்கவில்லையென்றும், அதனால் மாடுகள் தங்கும் கொட்டகை அல்லது குகையொன்றில் இயேசு பிறந்தார் என்றும் லூக்காவின் குறிப்புக்குப் பொதுவாக விளக்கம் தரப்படுகிறது. குழந்தை இயேசு தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டிருந்தார் என்பதைப் பார்த்து இந்த விளக்கம் கொடுக்கப்பட்டிருந்திருக்கலாம்.

தொடக்கக்காலங்களில் திருச்சபையில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை ஓவியங்கள் மூலமாக நாம் அறிகின்றோம். மேற்கத்திய நாடுகளின் ஓவியங்களில் தீவனத் தொட்டி மனிதரால் செய்யப்பட்டதாகக் காட்டப்படுகிறது. அது சுவரிலோ அல்லது பாறையிலோ பதித்து வைக்கப்படுவதாகக் காட்டப்படவில்லை. அதை வெவ்வேறு இடங்களில் மாற்றி வைத்துக்கொள்ள முடியும் என்று அத்தகைய ஓவியங்களிலிருந்து நாம் அறிகிறோம். இந்த அடிப்படையில் பார்க்கும்போது,இயேசு மாடுகள் அடைக்கப்பட்டக் கொட்டகையில் பிறக்கவில்லை; அவர் மக்கள் வாழ்ந்த வீட்டிற்குள் பிறந்தார் என்றும், அவரைக் கிடத்துவதற்குச் சரியான இடம் கிடைக்காதக் காரணத்தினால், அங்கிருந்த ஒரு தீவனத் தொட்டியில் அவர் கிடத்தப்பட்டார் என்று நாம் சொல்லாம். ஆனால் கி.பி. 330ஆம் அண்டிலிருந்து 1453 ஆம் ஆண்டுவரை கான்ஸ்டான்டிநோபிள் (கி.பி. 1453 ஆம் ஆண்டிலிருந்து முதல் இது இஸ்தான்புள் என்றழைக்கப்பட்டு வருகிறது) என்கிற நகரத்தைத் தலைநகரமாகக் கொண்டு இயங்கிய கிரேக்க மொழி பேசுபவர்கள் அதிக அளவில் வாழ்ந்த கிழக்கு உரோமைப் பேரரசில் (Eyzantime Empire)உருவான ஓவியங்களில் தீவனத் தொட்டியானது குகைகளில் உள்ள பாறைகளைக் குடைந்தெடுத்து உருவாக்கப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் நோக்கும்

போது, இயேசு மாடுகள் தங்கியிருந்த குகையொன்றில் பிறந்தார் என்றும், அந்தக் குகையில் பாறையைக் குடைந்து ஏற்படுத்தப்பட்டிருந்தத் தீவனத் தொட்டியில் இயேசு கிடத்தப்பட்டிருந்தார் என்றும் நாம் முடிவு செய்து கொள்ளலாம்.

ஆனால் லூக்கா எழுதியுள்ள நற்செய்தியை ஆழ்ந்து நோக்கும்போது, இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறக்கவில்லை என்றும், ஒரு குடும்பம் வாழ்ந்த வீட்டினுள் பிறந்தார் என்றும் நாம் சொல்ல முடியும். இயேசு பிறந்த நிகழ்வைப் பற்றி எழுதும்போது, லூக்கா கற்றலூமா என்கிற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துகிறார் (லூக் 2:7). இந்த வார்த்தை விடுதி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் லூக்கா இதே வார்த்தையை இயேசு தம் திருத்தூதர்களுடன் பாஸ்கா விழாவைக் கொண்டாடிய இடத்தைச் சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுத்துகிறார் (லூக் 22:11; காண்க. மா; 14:14). இந்த வார்த்தை அறை என்றும், விருந்தினர் அறை என்றும் விடுதி என்றும் பொருள்கொள்ளப்படுகிறது. தமிழாக்கம் செய்யப்பட்ட நமது விவிலிய நூலில், லூக்கா எழுதியுள்ள இயேசுவின் பிறப்பைப் பற்றியப் பகுதியில் இவ்வார்த்தை விடுதி எனவும், பாஸ்கா உணவைப் பற்றியப் பகுதியில் இது அறை எனவும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இயேசுவின் பிறப்பு நிகழ்ச்சிப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள இவ்வார்த்தையை அறை என்றோ விருந்தினர் அறை என்றோ நாம் மொழி பெயர்த்தோம் என்றால், ஒரு குடும்பம் வாழ்ந்த ஓர் இல்லத்தில்தான் இயேசு பிறந்தார் என்று நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

அப்படியென்றால் தீவனத் தொட்டி அங்கே எப்படி வந்தது என்கிற கேள்வி எழுகிறது. பாலஸ்தீன நாட்டில் கிராமப் புறங்களிலும், சிறிய நகரங்களிலும் வாழ்ந்த சாதாரண மக்கள் தங்களின் வீடுகளில் வளரும் கால்நடைகளை, இரவு நேரத்தில் அவற்றின் பாதுகாப்பிற்காகவும், குளிர் காலத்தில் அவற்றிற்கு வெதுவெதுப்பு ஏற்படுத்துவதற்காகவும், அவற்றை தங்கள் வீட்டினுள்ளே அடைத்து வைப்பது வழக்கம். தங்கள் வீட்டில் வளரும் கால்நடைகளை அடைத்து வைப்பதின் மூலம், அவற்றைத் தீய ஆவிகளிடம் இருந்தும், திருடர்களிடமிருந்தும் பாதுகாத்துக்கொள்வதாக மக்கள் எண்ணிக்கொண்டனர். அதுமட்டுமின்றி, கால்நடைகள் வீட்டினுள் அடைத்து வைக்கப்படும்போது, அவற்றின் உடல்களிலிருந்து வெளிப்படும் வெப்பம் குளிர் காலத்தில் அவ்வீட்டில் வசிப்பவர்களுக்கு இதமாகவும், வெதுவெதுப்பாகவும் இருக்கும்.

இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்னவென்றால், ஒரு வீட்டில் வாழும் குடும்பம் தங்களுடைய வளர்ப்புப் பிராணிகளை வீட்டின் கீழ்த்தளம் முழுவதிலுமோ அல்லது தங்கள் வீட்டின் கீழ்த்தளத்திலுள்ள ஏதாவது ஓர் அறையிலோ இரவு நேரத்தில் அடைத்து வைப்பது வழக்கம். தங்கள் வீடுகளில் விலங்குகளை அடைத்து வைக்கும் இடத்தில்தான் விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்கள், அதிகமாகப் பயன்படுத்தப்படாதப் பொருட்கள், மற்றும் தங்கள் நிலத்திலிருந்து அவர்களுக்குக் கிடைத்த விளைப்பொருட்கள் ஆகியவற்றை வைத்திருப்பார்கள். வீட்டின் கீழ்த்தளத்தில் அவர்கள் ஒரு பாறையைக் குடைந்து,அதை ஒரு தொட்டியாக மாற்றி, அதனுள் தங்களுடைய விலங்குகளுக்கான தீவனத்தைப் போட்டு வைத்திருப்பர்.ஒருவேளை வீட்டின் கீழ்த்தளத்தில்தான் அவர்கள் சமையல் செய்வது மற்றும் உணவு அருந்துவது போன்ற செயல்களைச் செய்திருந்திருக்கலாம். மக்கள் பகல் நேரத்தில் வீட்டின் கீழத்தளத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள். அனால் இரவு வேளையில் அவர்கள் உறங்குவதற்காக வீட்டின் மேல் தளத்திற்குச் சென்றுவிடும் பழக்கம் கொண்டவர்களாய் இருந்தனர்.


யோசேப்பும்,மரியாவும் பெத்லகேம் சென்றிருந்தபோது, யோசேப்பின் நெருங்கிய உறவினர் அல்லது நண்பரின் வீட்டில் அதிக எண்ணிக்கையில் விருந்தினர்கள் வந்திருந்தக் காரணத்தினால்,வீட்டின் மேல்தளத்தில் மற்றவர்களோடு அவர்கள் தங்கிக்கொள்ள முடியவில்லை. இடம் பற்றாக் குறையின் காரணத்தினால்

அவர்கள் கீழ்த்தளத்தில் தங்க வேண்டியதாயிற்று. ஆகவே அவ்வீட்டின் உரிமையாளர் தன் வீட்டின் கீழ்த்தளத்தை நன்றாகச் சுத்தம் செய்து, அங்கு அடைக்கப்படிருந்த கால்நடைகள் மற்றும் விலங்குகள், வைக்கப்பட்டிருந்த விளைப் பொருட்கள், அங்கிருந்த உபகரணங்கள் யாவற்றையும் அகற்றி, யோசேப்பும், மரியாவும் இன்னும் பிற விருந்தினர்களும், உறவினர்களும் தங்கிகொள்ள ஏற்பாடு செய்திருந்திருக்கலாம்.

இன்னுமோர் உண்மை நம் கவனத்திற்கு வருகிறது. இஸ்ரயேலர் பாஸ்கா ஆட்டுக்குட்டியை நிசான் மாதத்தின் பத்தாம் நாள் தேர்ந்தெடுத்து, அதை அம்மாதத்தின் பதினான்காம் நாள்வரை தங்கள் இல்லங்களில் பாதுகாப்பர் (விப 12:3-6). அதற்கு தீவனம் கொடுப்பதற்காக ஒரு தீவனத் தொட்டியைத் தயார் செய்துகொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பாஸ்கா விழாவைக் கொண்டாடும் ஒவ்வொரு வீட்டிலும் நிச்சயமாக ஒரு தீவனத் தொட்டி இருக்கும். யோசேப்பும், மரியாவும் பெத்லகேமிலுள்ள உறவினரின் வீட்டிற்குச் சென்றிருந்தபோது,பாஸ்கா ஆட்டுக்குட்டிக்குத் தீவனம் வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் தீவனத் தொட்டியொன்று அந்த வீட்டின் கீழ்த்தளத்தில் இருந்திருக்க வேண்டும், குழந்தை இயேசுவைக் கிடத்த வேறு சரியான இடம் அமையாததால், அங்கிருந்தத் தீவனத் தொட்டியில் அவரைக் கிடத்தி உறங்க வைத்திருந்திருக்கலாம். இஸ்ரயேல் மக்களின் விடுதலையை நினைவுறுத்தும் பாஸ்கா விழாக் கொண்டாட் டத்திற்காகக் கொல்லப்படப்போகும் ஆட்டுக்குட்டிக்குத் தீவனம் போடப் பயன்படுத்தப்படும் தீவனத் தொட்டியில், மானிடரின் பாவங்களைப் போக்கி, அவர்களுக்கு நிலைவாழ்வு அளிக்கப்போகும் உலக மீட்பர் இயேசு தூங்கினார் என்றால் அது எவ்வளவு பொருத்தமானது!தீவனத் தொட்டி என்கிற வார்த்தையை, கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சியைப் பற்றியக் குறிப்புக்களில் லூக்கா மூன்று முறைப் பயன்படுத்துவதைக் காணலாம் (லூக் 2:7,12,16). அதாவது உலகில் வாழும் மானிடருக்கு நிலை வாழ்வு வழங்கிட வானக உணவாக அவதரித்த இயேசு, சிறு குழந்தையாக, தீவனத் தொட்டியில் படுத்து உறங்கியது ஓர் அடையாளச் செயலாக விவிலிய நிபுணர்களால் பார்க்கப்படுகிறது. தீவனத் தொட்டி வீட்டில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு உணவு கொடுக்கிறது; அந்தத் தீவனத் தொட்டியில் படுத்து உறங்கிய குழந்தை இயேசு உலகில் வாழும் மானிடருக்கு ஆன்ம உணவாக வருகிறார் என்கிற உண்மை மிகத் தெளிவாக, வெளிப்படுத்தப்படுகிறது.

சுருங்கக்கூறின், இயேசு அன்பும், பாசமும் ததும்பி வழியும் ஒரு குடும்பச் சூழ்நிலையில்தான் பிறந்தார். நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் யோசேப்பு மற்றும் மரியாவைச் சுற்றிச் சூழ்ந்திருந்த வேளையில் உலக மீட்பர் இயேசு குழந்தையாகப் பிறந்தார். யோசேப்பும், மரியாவும் பெத்லகேமிலுள்ள ஒரு விடுதியில் தங்கியிருந் திருப்பார்களென்றால், அவர்களைச் சுற்றி முகம் தெரியாத அன்னியர்கள்தான் இருந்திருப்பர். இயேசுவும் அன்னியர்கள் நிறைந்த அந்தச் சூழ்நிலையில், அன்பை அனுபவிக்காமலேயே பிறந்திருந்திருப்பார்.அப்படி நடந்திருந்தென்றால், இஸ்ரயேலின் நம்பிக்கையே! துன்ப வேளையில் அதனை மீட்பவரே! நாட்டில் நீர் ஏன் அன்னியரைப் போல் இருக்கவேண்டும்? இரவு மட்டும் தங்க வரும் வழிப்போக்கரைப்போல் நீர் ஏன் இருக்க வேண்டும்? (எரே 14:8) என்று இறைவாக்கினர் எரேமியா இறைவனை நோக்கி எழுப்பிய புலம்பல் இறைவனால் கேட்கப்படவில்லை என்றாகியிருக்கும். ஆனால் இயேசு அன்னியர்கள் தங்கும் விடுதியிலோ அல்லது கால்நடைகளின் மத்தியிலோ பிறக்காமல், மனிதருக்கு மகிழ்ச்சி வழங்கும் விதத்தில் அன்பு அரசாளும் அருமையானக் குடும்பச் சூழ்நிலையில் பிறந்து,தம்மை இம்மானுவேல் (மத் 12:3; காண்க. 28:20) என்று நிரூபித்துள்ளார். அனைவருக்கும் எனது இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!

– பேரருட்திரு. முனைவர். **R.ஜோசப் ரவிபாலன்**
**திருத்தல அதிபர்**
திருக்கல்யாணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை.



# திருப்பாடல் 4

பேரருட்திரு. முனைவர். **R.ஜோசப் ரவிபாலன்**

திருப்பாடல் மூன்று காலை செபம் என்றால் (திபா 3:5), திருப்பாடல் நான்கு மாலையில் சொல்லும்செபமாகப் பார்க்கப்படுகிறது (திபா 4:8). மூன்றாம் திருப்பாடல் போலவே, இத்திருப்பாடலும் தனியாரின் புலம்பல் வகையைச் சேர்ந்ததுதான். இது தாவீது பாடியப் புகழ்பாடலாகக் கருதப்படுகிறது. கனத்த இதயத்தோடு, படுக்கைக்குத் துயில்கொள்ளச் சொல்லும் ஒருவர், தன் வேதனைகளையும், துன்பங்களையும் மனதில் எண்ணிக் கொண்டு, இறைவனிடம் செபிப்பதை இத்திருப்பாடல் எடுத்துரைக்கிது. இது ஒரு வழக்கமாக இருந்திருக்கலாம்; அல்லது வேறு ஏதாவது காரணத்தினால் ஏற்பட்டத் துன்பமாக இருந்திருக்கலாம். தான் சார்ந்திருந்த சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டவர்களுக்கு எதிராகவோ அல்லது பொய்யையும்,மாயையும் நம்பிய நபர்களுக்கு எதிராகவோ இப்பாடலின் ஆசிரியர் இறைவனிடத்தில் முறையிட்டுப் புலம்பியிருந்திருக்கலாம்.

நியாய உணர்வு கொண்டவராகிய இப்பாடலின் ஆசிரியருக்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் மிகக் கடுமையான நெருக்கடிகள் வந்ததன் காரணமாக , தன்னை நெருக்கி, வருத்திக் கொண்டிருக்கும் எல்லாத் துன்பங்களிலிருந்தும் தான் விடுவிக்கப்பட வேண்டும் என்று இவர் இறைவனிடம் எடுத்துச்சொல்லி, புலம்பி வேண்டி, இறைவனிடமிருந்து உதவியைப் பெற்றார் என்று அறிகிறோம்.

இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள சில வார்த்தைகளும்,சொற் பதங்களும் மூன்றாம் திருப்பாடலிலும் இருப்பதைக் காணலாம். இறைவனிடம் நாம் உருக்கமாக மன்றாடும்போது, அவர் நமக்குத் தகுந்த பதில் வழங்குகிறார் (திபா 4:1; 3:4).



ஆண்டவரின் மாட்சி அல்லது அவரது மகிமை (திபா4:2; 3:3) குறித்து இந்த இரண்டு திருப்பாடல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதை அறிகிறோம் (திபா4:2; 3:3) . இத்திருப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள வெறுமை (திபா 4:2) என்கிற வார்த்தை இந்தப்பாடலை திபா 2:1 என்கிற பகுதியோடு இணைக்கிறது. இந்தப்பாடல் நம்பிக்கையின் பாடலாக இருக்கிறபடியா, இதன் ஆசிரியர் இறைவன்மீது தான் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளதை நம்மால் காணமுடிகிறது.

மேலும் ஆசிரியர் இறைவனிடம் ஒப்படைத்த விண்ணப்பம் மற்றும் இறைவனால் அவர் காப்பாற்றப்பட்டதை

நன்றியோடு ஏற்றுக்கொள்ளும் தம்மை ஆகியவை இப்பாடலில் அடங்கியுள்ளதை நாம் பார்க்கலாம். இந்த உண்மையை மையப்படுத்தி, இப்பாடலில் மானிடருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது (காண்க. திபா 49:2; 62:9; புல 3:33).

இத்திருப்பாடலை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்: (இறைவாக்கியம் இவா) 1- இறைவனிடம் ஒப்படைக்கப்படும் விண்ணப்பம்; 2. இவா 2-5-சிலைவழிபாட்டில் ஈடுபடுவோரைப் போலில்லாமல் இப்பாடலை இயற்றிப் பாடியுள்ள ஆசிரியர் இறைவனை முழுமையாக நம்புகிறார்; இவா 6-8-ஆசிரியர் தன் சுய பாதுகாப்புக்காகவும், இறைவனின் ஆசீர் வேண்டியும் செபிக்கிறார்.

ஆசிரியர் இறைவனைப் பார்த்து, எனக்கு நீதி அருள்கின்ற கடவுளே என்று பாடும்போது அங்கே ஒரு நீதி அமைப்பு இருப்பது போலவும், அநியாயமாக பிறரால் தூற்றப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆசிரியர் இறைவனை நோக்கி, புலம்பி அழுது, அபயக் குரல் எழுப்பி, வேண்டுவதுபோலவும் நமக்குத் தென்படுகிறது. மேலும் நான் நெருக்கடியில் இருந்தபோது, நீர் எனக்குத் துணைபுரிந்தீர் (இவா 1) என்று ஆசிரியர் இறைவனிடத்தில் எடுத்துச் சொல்லி வேண்டுகின்றபோது குறுகலான மற்றும் பரந்து விரிந்த என்கிற கருத்துக்கள் நம் மனக்கண் முன்பாக வருவதை உணரலாம். என்நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன் (திபா 18:6; 118:5) என்றும் நெருக்கடியற்ற இடத்திற்கு அவர் என்னைக் கொணர்ந்தார் (திபா 18:19) என்று ஆசிரியர் முழங்கும்போது, நெருக்கடி என்றால் துன்பம் என்றும், நெருக்கடியற்ற நிலை என்றால் துன்பம் நீங்கி, மகிழ்ச்சியை அடையும் நிலை என்றும் அர்த்தம் கொள்ளப்படுவதை நாம் காண்கிறோம்.

மானிடரே (இவா 2) என்கிற சொல் இரண்டு விதங்களில் விளக்கப்படலாம்: சமுதாயத்தில் உயர்வான இடத்தில் இருந்துகொண்டு அதிகாரம் காட்டுவோர் என்றும், சாதாரண மனிதர் என்றும் இச்சொல்லை நாம் புரிந்து கொள்ளலாம். எவ்வளவு காலம் வெறுமையை விரும்பிப் பொய்யானதை நாடிச் செல்வீர்கள்? (இவா 2) என்கிற கேள்வியை நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்கிறபோது,எவ்வளவு காலம் நீங்கள் சிலைகளைத் தேடிச் செய்வீர்கள்? என்ற விதத்தில் அதைப் புரிந்துகொள்ளலாம். சிலை வழிபாடு குறித்து, இணைச்சட்ட நூலில் ஏற்கெனவே மோசே மிகவும் கடுமையாக மக்களை எச்சரித்துள்ளதை நாம் இங்கே நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும் (இச 4:28-29; 11:13-17). வெறுமையை விரும்பிப் பொய்யானதை நாடிச் செல்பவர்களை படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி அமைதியாயிருங்கள் (இவா 4) என்று ஆசிரியர் கூறுகிறபோது, உங்கள் தவறுகளுக்காக அதிகமாக அழுது கண்ணீர் விடுங்கள்,என்று சொல்வதாகப் புரிந்துகொள்ளலாம்.

மேலும் அவர் கூறுகின்றார்: ஆண்டவரே, எங்கள்மீது உமது முகத்தின் ஒளி வீசும்படிச் செய்தருளும் (இவா 6). இறைவனின் திருமுகத்தின் ஒளி மனிதர்மீது படர்ந்தால், அவர்கள் நலமுடன் இருப்பர் என்றும், நேர் வழியில் நடந்து முன்னேறுவர் என்றும் அறிகிறோம் (எண் 6:23-27; திபா 67:1-2). கடவுளின் புன்னகை மனிதருக்கு நலன்களை வாரி வீசுகின்றது (திபா 44:3; 89:15). இறைவனின் இரக்கப் பார்வை யார்மீது விழுகிறதோ அவர் மன நிறைவையும், நிம்மதியையும் பெறுவர் (இவா 8; மேலும் காண்க. இச 33:28). மனிதருக்குத் துன்பம் நேரிடும்போது, அவர்களுக்கு அடைக்கலமும் ஆறுதலும் தரவல்லவர் இறைவன் ஒருவர்தான் என்கிற கருத்து இந்தப் புலம்பல் பாடலில் தெளிவாக உணர்த்தப்படுவதை நாம் பார்க்கலாம்.ஆகவே இக்கட்டான சமயங்களில் இறைவனிடம் திரும்பினால் மானிடராகிய நமக்கு மிகவும் நலம். இறைவனிடம் திரும்புதல் என்றால் மனம்மாறி, இறைவனிடம் சரணடைவது

என்று பொருள்கொள்ளப்படுகிறது.


நேர்மையோடு இறைவனிடம் செலுத்தப்படும் வழிபாடு ஒருபோதும் தவறிப்போகாது;யாரையும் ஏமாற்றத்திற்கு உட்படுத்தாது. இறைவனை உள்ளன்போடு வாழ்த்தி, வணங்க விரும்புகிறவர் முதலில் செய்ய வேண்டியது இது தான்; தான் செய்த தவறுகள், குற்றங்குறைகள் ஆகியவை குறித்து முழுமையான மனத் துயர் அடைந்து, மீண்டும் இறைவனிடம் வந்து உறவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

இறைவன் ஒருவரால் மட்டும்தான் கலங்கிய உள்ளத்திற்கு ஆறுதல் தர முடியும். ஒருவரிடம் இருக்கும் மன அமைதிதான் மற்ற உலகச் செல்வங்களைவிட மேலான செல்வம். அந்தச் செல்வத்தை இறைவன் ஒருவரால்தான் மானிடருக்கு வழங்க முடியும் என்கிற கருத்தினை மிகவும் வலியுறுத்தி இத்திருப்பாடல் பேசுகிறது.

# ஏன்? எனக்கு மட்டும்!

– திவ்யா கிங்ஸ்லி, பொற்பை

நமக்கு ஒரு துன்பம் வரும்போதெல்லாம் ஏன் எனக்கு மட்டும் இவ்வாறு நடக்கிறது என்று பலமுறை நாம் நமக்குள்ளே கேட்பதுண்டு! இதை ஒரு எதார்த்தமான நிகழ்வோடு பார்ப்போம். ஆர்தர் ஆஷ் (Arthur Ash) ஒரு புகழ்பெற்ற விம்பிள்டன் பட்டம் பெற்ற டென்னிஸ் வீரர். அவருக்கு செய்யப்பட்ட இருதய அறுவை சிகிச்சையின்போது செலுத்தப்பட்ட இரத்தத்தின் மூலம் 1983ம் ஆண்டு AIDS நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அந்த நோயின் உச்சகட்டத்தில் இருந்தபோது அவருடைய ரசிகர் எழுதிய கடிதத்தில் கடவுள் ஏன் உங்களுக்கு இவ்வாறான ஒரு வியாதியைக் கொடுத்தார் என்று கேட்டிருந்தார். அதற்கு அவர் எழுதிய பதில், உலகம் முழுவதும் 50 மில்லியன் குழந்தைகள் டென்னிஸ் விளையாட ஆரம்பிக்கிறார்கள். 5 மில்லியன் டென்னிஸ் விளையாட பயிற்சி பெறுகிறார்கள். இதில் 5 இலட்சம் பேர் பிரசித்தி பெற்ற பயிற்சியாளர்களிடம் பயில்கிறார்கள். 50,000 பேர் டென்னிஸ் விளையாடும் வட்டத்திற்குள் வருகின்றனர். மேலும் 5000 பேர் கிராண்ட் சிலாம் (Grant Slam) வரை வருகின்றனர். 50 பேர் விம்பிள்டன் வரை வருகின்றனர். 4 பேர் அரையிறுதி வரை 2 பேர் இறுதிப்போட்டி வரை வந்து கடைசியில் ஒருவர் வெற்றி பெறுகிறார். அந்த ஒருவராக கோப்பையைக் கைப்பற்றிய போது நான் கடவுளைப் பார்த்து கேட்கவில்லை, எனக்கு மட்டும் ஏன்? ஆகவே இப்போது நான் கடவுளைப் பார்த்துக் கேட்கவில்லை எனக்கு மட்டும் ஏன்? ஆகவே இப்போது நான் துன்பப்படும் போது மட்டும் என்னால் கேட்க முடியாது என்று எழுதியிருந்தார். நாமும் இவ்வாறான சிந்தனையோடு வாழ நம்மை பழக்கிக்கொள்ள வேண்டும் நம்மில் எத்தனை பேர் துன்பப்படும்போது கடவுளை பிரார்த்திக்கிறோம். ஆனால் இன்பத்தில் கடவுளுக்கு நன்றி கூற மறுக்கிறோம். ஆனால் கடவுளோ அவர் நமக்கு இருக்கிறார் என்று நம்பிக்கை அளிக்கும் விதமாக உரோமயர்களுக்கு எழுதிய திருமுகம் அதிகாரம் 8:28ல் கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கு ஏற்ப அழைக்கப்பட்டவர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, நாம் பெரிய கம்பெனி வைத்திருப்பவராய் இருந்தாலும் நம்மை வழிநடத்த ஒருவர் இருக்கிறார். அவர்தான் கடவுள் நடப்பது எல்லாம் இறைவன் சித்தமே. எல்லாம் நன்மைக்கே.



–பொற்பை அருட்திரு **போஸ்**

வாழ்க்கையில் எல்லாமே இருண்டு சூன்யமாகத் தோன்றிய போது வாழ்க்கையை முடித்துக் கொள்ள தீர்மானித்த முகிலன் அக்கம்பக்கம் உள்ளவர்களின் முதல்சனி பக்தியைக் கேள்விப்பட்டு, சாவதற்குமுன் இம்மக்களோடு பொத்தக் காலன்விளை திருக்கல்யாண மாதா ஆலயம்தான் சென்று வருவோமே என்ற எண்ணத்தோட கூட்டத்தோடு கூட்டமாக வாகனத்தில் ஏறிக்கொண்டான். அவனோடு பயணித்தவர்கள் அவனை ஏதோ தீண்டப்படாதவன்போல் நினைத்து ஒதுங்கினர்.

வாகனம் காலை 8.30க்கு ஆலய வளாகத்தை வந்தடைந்தது. வந்தோரை வரவேற்கும் தோற்றத்துடன் பிரதான நுழைவாயிலிலே இரு சம்மனசுகள். அழகிய ஆலயம். பரந்த ஆலய வளாகம். பசுமையான மரங்கள். அனைவருக்கும் நிழல்தரும் தென்னை ஓலை பந்தல்கள். அன்னையின் புகழ்பரப்பும் அழகிய ஸ்டால்கள். குட்டிக்கோவிலாக உயர்ந்த தேர்மனை. பக்தர் தங்குவதற்கு எழுப்பப்பட்டுள்ள கட்டிடம். உணவகம். குக்கிராமத்தை பட்டணமாகச் சித்தரிக்கும் ஆகாய பேலஸ். வழிகாட்டி உதவும் தன்னார்வத் தொண்டர்களின் சுறுசுறுப்பு.இதய அமைதி தரும் ஆலய உள்ளமைப்பு . சுடர்வீசும் நற்கருணைப்பேழையும் அன்னையின் திருஉருவமும். வெண்ணிற அங்கியும் சிவப்புக் கச்யையுமாக நடமாடிய திருத்தல தந்தையின் கனிவு. இவையெல்லாம் முகிலனின் கவனத்தை வெகுவாக ஈர்த்து மனதுக்கு இதமளித்தன.

இதமான உணர்விலே, நாம உலகில்தான் இருக்கிறோமா அல்லது தேவலோகத்தில் இருக்கிறோமா என்ற எண்ணம் முகிலனில் உருவானது. எல்லோராலும் ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு தன்னாலும் நல்லது எதுவும் செய்ய வகையற்று வாழ்க்கை சூன்யம் ஆகிவிட்ட வேளையிலே எனக்கு ஏன் இந்த புதிய அனுபவம்? என்ற வினா அவனுடைய உள்ளத்தில் மேலோங்கியபோது திருத்தலத்தந்தை அவனைநோக்கி வருவதாகத் தோன்றியது. ஆதரவாக தந்தையை அவன் பார்த்தான். திருத்தலத்தந்தை அவர்கள் அவனைக் கடந்து செல்கிற நேரத்திலே ஃபாதர் அந்த பைபிளை ஒரு நிமிடத்திற்குக் கொடுங்கள் என்றான் முகிலன்.

முகிலனை ஏறஇறங்கப் பார்த்துவிட்டு, தனது கரத்திலே கொண்டிருந்த திருவிலியத்தை திருத்தலத்தந்தை அவர்கள் அவனிடம் கொடுத்தார்கள். திருவிவிலியத்தைப் பெற்ற முகிலன் தன்னிலே ஒரு புத்தெழுச்சியைக் கண்டான். அஃது என்றும் அவன் அனுபவித்திராத ஒரு புதுஅனுபவம்.மலர்ந்த முகத்தோடு தன் பார்வையை திருவிவிலியத்தை திறந்து அதனுள் செலுத்தினான். அவனுக்குத்

தெரியும் இறைவாக்கினை உள்ளடக்கியதுதான் அந்த திருவிவிலியம். திருக்கல்யாணமாதாவின் பரிந்துரையால் தனக்குக் கிடைக்கும் இறைவாக்கு என்ன என்று அறிவதிலே ஆர்வம் கொண்ட அவனுடைய கண்களை திருப்பாடல் நூலில் 118ம் அதிகாரம் 22ம் வசனத்திலே அருளப்பட்டுள்ள கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டத்துக்கு மூலைக்கல் ஆயிற்று! என்ற செய்தி காந்தமாக ஈர்த்தது. அதனைப் படித்தமாத்திரத்தில் அதனுடைய அர்த்தம் அவனுக்குப் புலப்படாவிட்டாலும் அந்த வசனங்களை முத்திசெய்தான். அடுத்து, திருத்தலத்தந்தையின் கரங்களிலே பைபிளை வைத்துவிட்டு தந்தையின் கரங்களையும் முத்தி செய்தான். முகிலனில் திருக்கல்யாணமாதா செயல்படும் தன்மையைக் கண்ட திருத்தலத் தந்தை, அமைதியாக அவ்விடத்திலிருந்து சென்றார்.

அந்நேரமுதல், அன்னை மரியாளின் தாலாட்டுத் தளமான திருக்கல்யாண மாதாவின் ஆலய வளாகத்திலிருந்து அவன் புறப்பட்ட நேரமான மாலை வரை முகிலனின் உள்ளத்திலே திருவிவிலிய வசனங்கள் சுடர்வீசி, பல்வேறு எண்ண அலைகளைத் தோற்றுவித்தன. அந்த எண்ண அலைகளிலே அவன் தன் வாழ்வின் மேன்மையை உணர்ந்தான்.

மக்களும், சூழ்நிலையும் என்ன ஒதுக்கினாலும், வாய்ப்புகள் எல்லாம் நழுவிச்சென்றாலும், உள்ளம் கசந்து வாழ்வின்மீது வெறுப்பு படர்ந்தாலும் இறைவா! நீர் என்னைப் பாசத்தோடு பார்த்து வழிநடத்துகிறீர். எனது கடந்த கால வாழ்வு, நிகழ்கால வாழ்விற்கு அடித்தளமாக உள்ளது என்ற உண்மையை எனக்குப் புலப்படுத்திய திருக்கல்யாணத்தாயே! கோடி நன்றி உமக்கே! உமது அரவணைப்பில் வாழும் எனக்கு உமது திருமகன் இயேசுவின் அருள் என்னைச் சூழ்ந்துள்ளது. என்பதை அனுபவரீதியாக ஏற்றுக்கொண்ட முகிலனுக்கு திருக்கல்யாணமாதா ஆலய தரிசனம் புதியதொரு வாழ்வுக்கு மூலைக்கல்லாகிற்று.

# குழந்தை ஏசு பிறப்பின் மகிழ்ச்சி

எங்குமில்லாத வல்லமை மிகுந்த குழந்தை ஏசுவே உம் பாதம் வந்தோமையா; மெசியா வருவார், நமக்கு அமைதியைக் கொண்டு வருவார், மகிழ்ச்சியைத் தருவார், ஒடுக்கப்பட்டோர், ஏழைகள் அனைவருக்கும் நீதியும், நேர்மையும் உள்ள அரசை ஏற்படுத்துவார் என்ற இந்த நம்பிக்கையானது இஸ்ராயலருக்கு மகிழ்ச்சியை அளித்தது.எதிர்நோக்கி இருப்பது நிறைவேறும் எனக் காத்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது .கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தது நாம் மகிழ்ச்சியாய் இருக்கவே. இந்த மாபெரும் நற்செய்தியை கொண்டுவர கடவுளின் கருவிகளாக அன்னை மரியாளும், தந்தை சூசையப்பரும் தங்களை தியாகம் செய்தனர். மகிழ்ச்சியால் நிறைந்தனர். மகிழ்ச்சி கடவுளின் கொடை. நாம் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும். நீ என்னை மகிமைப்படுத்த மகிமைப்படுத்த நான் உன்னை மகிமைப்படுத்துவேன் என்று கூறிய அற்புதக் குழந்தை ஏசுவை மகிமைப்படுத்துவோம்.இயேசுவின் குழந்தைப் பருவ பேருண்மைகளை தியானித்து தெய்வீக குழந்தையின் பிறப்பின் மகிழ்ச்சி நம் குடும்பங்களில் மலர குழந்தை ஏசுவை மகிமைப்படுத்துவோம், மன்றாடுவோம், மகிழ்ச்சியாய் வாழ்வோம்.

– **எம்.ஸ்டீபன் ராஜ்** (த.ஆ.பணிநிறைவு) பொற்பை




கி.பி. 1123ஆம் ஆண்டி லேயே பழைய ஆங்கில மொழியில் கிறிஸ்து பிறப்பு விழா கிறிஸ்துவின் திருப்பலி என்று பொருளுணர்த்தும் கிறிஸ்டஸ் மாஸ்ஸே அல்லது கிறிஸ்டஸ் மெஸ்ஸே என்ற வார்த்தை களால் அழைக் கப்பட்டது. கி.பி. 1568 ஆம் ஆண்டில்தான் முதல் முறையாக ஆங்கில மொழியில் கிறிஸ்துமஸ் என்கிற வார்த்தை பயன்னடுத்தப்பட்டது. கிறிஸ்துமஸ் விழா வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நாள்களில் கொண்டாடப்பட்டு வருகிறது. கத்தோலிக்கத் திருச்சபையினரும், பல கிறிஸ்தவப் பிரிவினைச் சபைகளைச் சேர்ந்தவர்களும் கிறிஸ்துமஸ் விழாவை டிசம்பர் 25ஆம் நாள் கொண்டாடுகின்றனர்; கிழக்குத் திருச்சபையினர் (Eastern Orthdox) ஜனவரி 6ஆம் நாளன்றும், ஆர்மேனியத் திருச்சபையினர் ஜனவரி 19 ஆம் நாளன்றும் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுகின்றனர்.

கி.பி. 300ஆம் ஆண்டு வரை கிறிஸ்து பிறப்பு விழா டிசம்பர் 25ஆம் நாளில் கொண்டாடப் பட்டதற்கான ஆதாரம் ஏதுமில்லை. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரோமை நகரைச் சேர்ந்த புனித ஹிப்போலிட்டஸின் (St. Hippolytus) கருத்துப்படி, அன்னை மரியாவின் வயிற்றில் இயேசு கருத்தரிக்கப்பட்ட நேரத்திலிருந்து, அவர் சிலுவையில் அறையப்பட்ட நேரம் வரை உள்ளகால இடைவெளி சரியாக முப்பது மூன்று ஆண்டுகள். இயேசு கருத்தரிக்கப்பட்டதும், அவர் சிலுவையில்அறையப்பட்டதும் மார்ச் 25ஆம் நாள்தான் என்பது ஹிப்போலிட்டஸின் அசைக்க முடியாத நம்பிக்கை. இவரது கணிப்பின் அடிப்படையில் பார்க்கிறபோது, இயேசு அவர் தம் தாயின் வயிற்றில் கருத்தரிக்கப்பட்டபின், சரியாக ஒன்பதாம் மாதம் நிறைவடைந்தபோது,அதாவது டிசம்பர் 25ஆம் நாளன்று, பிறந்தார் என்று எண்ணிக் கொள்ளலாம். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில், கிறிஸ்துமஸ் விழாவை எந்த நாளில் கொண்டாடலாம் என்ற கேள்விக்குப் பதில் தேடப்பட்டபோது, மார்ச் 28ஆம் நாள்,ஏப்ரல் 18 மற்றும் 19ஆம் நாள்கள் என்று வெவ்வேறு நாள்கள் முன்மொழியப்பட்டுப் பரசீலிக்கப்பட்டன.

உரோமைப் பேரரசைச் சேர்ந்த சூரியனைக் கடவுளாக வழிபடும் மதத்தினைப் பின்பற்றியவர்கள் (Pagans)சூரியக் கடவுளுக்கென்று ஒரு விழாவை ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 25ஆம் நாள் கொண்டாடினர். அது அந்தக் கடவுளின் பிறந்த நாள் விழா. அந்தப் பிறந்த நாள் விழாவானது சோல் இன்விக்தூஸ் (The Unconquerable)என்ற பெயரில் கொண்டாடப்பட்டது. தமிழில் இது வீழ்த்த முடியாத சூரியன் என்று பொருள் கொள்ளப் படுகிறது. உரோமைப் பேரரசர் கான்ஸ்டன்டைன் (Constantine the Great) கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவுடன், கி.பி. 313ஆம் ஆண்டில் மிலான் சாசனம்(Edict of Milan) என்தோர் அறிக்கையைப் பிரகடனம் செய்தார். அச்சாசனத்தின் மூலம் பேரரசர் கிறிஸ்தவ மதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, பல சலுகைகளையும் வழங்கினார்.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இறைவாக்குப் பணி செய்த மலாக்கி இறைவாக்கினர் நூலில் நீதியின் கதிரவன் என்கிற சொற்றொடர் குறிப்பிடப்பட்டுள்ளது (மலா 4:2). கி.பி.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து நீதியின் கதிரவன் என்கிற அடைமொழி இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டது. அகவே உரோமைப் பேரரசில் சூரியக் கடவுளுக்கு ஏற்கெனவே பிற மதத்தவரால் டிசம்பர் 25அம் நாள் கொண்டாடப்பட்ட விழாவைக் கிறிஸ்தவர்கள், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழாவாகக் கொண்டாடத் தொடங்கினர். அதுவே இன்றும் தொடர்கிறது.

# திருக்கல்யாணத்தாய் திருத்தல பெருவிழா அன்னையின் அதிசய 102வது தேர்ப்பவனி முக்கிய நிகழ்வுகள்

| நாள் | நிகழ்வுகள் |
|---|---|
| **12.01.15**<br>**ஞாயிறு** | காலை 7 மணி திருப்பலியில்<br>**திருவிழா அறிக்கை** |
| **14.01.15**<br>**புதன்** | மாலை 6.30 மணி திருத்தலத் திருவிழா<br>**கொடியேற்றம்** |
| **21.01.15**<br>**புதன்** | எட்டாம் திருவிழா<br>பகல் 12 மணி **மலையாளத் திருப்பலி**<br>மாலை 7 மணி **சிறப்பு நற்கருணை பவனி** |
| **22.01.15**<br>**வியாழன்** | ஒன்பதாம் திருவிழா<br>பகல் 12 மணி **மலையாளத் திருப்பலி**<br>மாலை 6.30 மணி திருக்கல்யாண அன்னையின்<br>**அதிசய அலங்கார 102வது தேர்ப்பவனி**<br>இரவு 9மணி **சிறப்பு மாலை ஆராதனை** |
| **23.01.15**<br>**வெள்ளி** | பத்தாம் திருவிழா<br>காலை 7 மணி **பெருவிழா கூட்டுத்திருப்பலி**<br>பகல் 12மணி மலையாளத் திருப்பலி<br>மாலை 6.30 மணி திருக்கல்யாண அன்னையின்<br>**அதிசய அலங்கார 102வது தேர்ப்பவனி** |
| **24.01.15**<br>**சனி** | மாலை 6.30 மணிக்கு **திருவிழா விருந்து** |
| **24.01.2015**<br>**சனி முதல்**<br>**26.01.2015**<br>**திங்கள் வரை** | ஆகிய மூன்று நாட்களும் இரவு புனித செபஸ்தியார் நாடகம் கர்நாடக இசையில் நடைபெறும். |

1. திருத்தல பொருட்கள் வாங்குமிடம்
2. தங்கும் இடவசதி
3. குடிநீர் வசதி
4. உணவு வசதி
5. கழிப்பிட வசதி
6. வாகன வசதி
7. முதலுதவி வசதி
8. நேர்ச்சை மூடி இறக்கும் வசதி
9. நேர்ச்சை காது குத்தும் வசதி
10. நேர்ச்சை அசனம் கொடுக்கும் வசதி

மேற்கொண்டுள்ள விவரங்களை தெரிந்து கொள்ள திருத்தல அதிபரை தொடர்பு கொள்ளவும். தொடர்பு எண் : 04639 261230 ,261330, 261430

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330, 261430**

**01-11-2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1572 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1346 பேர் |
| சுகப்பிரசவம் | - | 980 பேர் |
| நற்சுகம்பெற | - | 1628 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 729 பேர் |
| தேவஅழைத்தல் | - | 543 பேர் |
| வேலைகிடைக்க | - | 1981 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1422 பேர் |
| குடும்பசமாதானம் | - | 1894 பேர் |
| குடும்பநலன் | - | 985 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 763 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 575 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1374 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1819 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 743 பேர் |
| மனமாற்றமடைய | - | 1465 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1698 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 674 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 565 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1894 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 703 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** - பங்குத்தந்தை

**உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி :kalyanamatha@gmail.com**

திருக்கல்யாண மாத இதழின் சந்தாதாரர்களில் பெரும்பாலான சந்தாதாரர்கள் வரும் டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதால் தாங்கள் தங்கள் சந்தாக்களை ஜனவரி முதல் புதுப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம். சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவைப் புதுப்பிக்க வரும்போது தங்கள் முகவரியுடன் இணைக்கப்பட்டுள்ள பதிவு எண்ணையும் எடுத்துவரும்படி கேட்டுக்கொள்கிறோம். சந்தாவை புதுப்பிக்காத வர்களுக்கு மாத இதழ் அனுப்புவது நிறுத்தப்படும்.


**திருக்கல்யாணத்தாய் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!**

கருப்பு வெள்ளை முழுப்பக்கம் - ரூ.1000/- கலர் முழுப்பக்கம் - ரூ.2500/-

தொடர்புக்கு : **திருத்தல அதிபர்**

திருக்கல்யாண மாதா திருத்தலம்

பொத்தக்காலன்விளை 628 702 தூத்துக்குடி மாவட்டம்,

தமிழ்நாடு தொலைபேசி : 04639 - 261230, 261330, 261430

# திருச்சபைச் செய்திகள்

பேரருட்திரு. முனைவர் R.ஜோசப் ரவிபாலன்

## மெக்ஸிகோ மாணவர்கள் படுகொலைக்குக் கண்டனம்

மெக்ஸிகோ நாட்டின் தென் மாநிலமான குயரேரோவிலுள்ள இகுவாலா என்கிற இடத்தில் 43 ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டு, அவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டுள்ளன. நாட்டின் தலைநகரமாகிய மெக்ஸிகோ மாநகரத்திலிருந்து 120 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள இகுவாலாவில் செப்டம்பர் 26ம் நாள் இந்த மாணவர்கள் திடீரென்று காணாமல் போய்விட்டனர். அவர்கள் போதைப்பொருட்கள் வியாபாரம் செய்யும் கும்பலால் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன. இகுவாலா நகரத்து மேயரின் கட்டளையின் பேரில் கூலிப்படையினர் இந்தப் படுகொலையைச் செய்துள்ளனர். இந்தப் போதைப் பொருள் கும்பலுக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதுடன், பல அரசியல் தலைவர்களுக்கும் இந்தப் படுகொலையில் மிகுந்த தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. மெக்ஸிகோ நாட்டு மக்களுக்கும் அந்நாட்டின் அரசாங்கத்திற்கும் இடையே நல்லுறவு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இந்தக் கொடூரச் செயலை திருத்தந்தை ஃபிரான்சிஸ் வன்மையாகக் கண்டித்துள்ளார். கொல்லப்பட்ட மாணவர்களுக்காக செபிப்பதாகவும், அவர்களின் குடும்பங்களோடு நம் இதயங்களும் ஒன்றிணைந்து, அவர்களின் வேதனையில் நாமும் பங்கு கொள்ள வேண்டுமென திருத்தந்தை அறிக்கை விடுத்துள்ளார்.

## அர்ஜெண்டீனா - சிலி சமாதான ஒப்பந்தத்தின் 30ம் ஆண்டு விழா

நவம்பர் 12ம் நாள் புதன்கிழமை தனது வாராந்திர மக்கள் சந்திப்பின்போது, அர்ஜெண்டீனா மற்றும் சிலி நாட்டிற்கு இடையே சமாதான ஒப்பந்தத்தின் முப்பதாவது ஆண்டினை நினைவு கூர்ந்தார். இரண்டு நாடுகளுக்கும் இடையே இருந்த எல்லைப் பிரச்சனை 1978ம் ஆண்டு பெரிதாக வெடித்தது. அது பீகில் சண்டை என்று அறியப்படுகிறது. இந்தப் பிரச்சனை பெரிதாகியபோது இரு நாடுகளுக்குமிடையே போர் வரக்கூடிய சூழ்நிலை உருவானது. அப்பொழுது முன்னாள் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் கர்தினால் அந்தோணியா சமோரேயை தூதுவராக அனுப்பி, போர் வராமல் தடுத்தார். 1979ம் ஆண்டில் மீண்டும் இந்த இரு நாடுகளுக்குமிடையே இருந்தப் பிரச்சனை தீர்த்து வைக்குமாறு வத்திக்கானுக்கு விண்ணப்பம் வந்தது. பிறகு 1984ம் ஆண்டில் இந்த இரு நாடுகளும் சமாதானம் மற்றும் நட்புறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த சமாதான உடன்பாட்டில் வத்திக்கானுக்கு அதாவது திருத்தந்தை இரண்டாம் ஜான் பாலுக்கு பெரும் பங்கு உண்டு. அந்த ஒப்பந்தம் அல்லது உடன்பாடு நிறைவேறி முப்பது ஆண்டுகள் நிறைவேறியுள்ளதை திருத்தந்தை பிரான்சிஸ் மகிழ்வுடன் நினைவுகூர்ந்தார். மக்கள் சந்திப்பின் வேளையில் சிலி நாட்டு இராணுவத் தலைவர்கள் சிலர் இருப்பதைக் கவனித்த திருத்தந்தை சமாதான உடன்படிக்கைக்கு மூலகாரணம் பேச்சுவார்த்தைதான் என்று கூறி, பேச்சு வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனநிலை இருந்தால் பல பிரச்சனைகளைத் தீர்த்துவிட முடியும் என்கிற ஆலோசனையை அவர் வழங்கினார். முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக அர்ஜெண்டீனாவுக்கும் சிலிக்கும் இடையே போர்

வராமல் தடுத்து, சமாதான உடன்பாடு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த திருத்தந்தை இரண்டாம் ஜான் பாலையும், கர்தினால் சமோரேயையும் அவர் மனதாரப் பாராட்டினார்.

## கத்தோலிக்க முஸ்லீம் அமைப்பின் மூன்றாம் சந்திப்பு

நவம்பர் 12ம் நாள் மக்கள் சந்திப்பிற்கு சற்று முன்பாக திருத்தந்தை ஃபிரான்சிஸ் கத்தோலிக்க முஸ்லீம் அமைப்பின் மூன்றாம் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தவர்களை சந்தித்துப் பேசினார். 2006ம் ஆண்டில் தெற்கு ஜெர்மனியிலுள்ள பவேரியாப் பகுதியில் அமைந்துள்ள ரேகன்ஸ்பர்க் நகரத்து பல்கலைக்கழகத்தில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் பேரறிஞர்களைச் சந்தித்து அவர்களுக்கு உரை நிகழ்த்தியபோது, அவர் பயன்படுத்திய ஓர் எடுத்துக்காட்டை முஸ்லீம் மதத்தைப் பின்பற்றும் பலர் எதிர்த்தனர். சில தீவிரவாதிகள் திருத்தந்தைக்கு அச்சுறுத்தல்கள் கொடுத்தனர். அந்தச் சூழ்நிலையில் உருவானதுதான் கத்தோலிக்க – முஸ்லீம் அமைப்பு. ரேகன்ஸ்பர்க் பிரச்சனைக்குப் பின் 2007ம் ஆண்டில் 138 முஸ்லீம் அறிஞர்கள் கத்தோலிக்கத் தலைவர்களுக்கு சமாதானக்கரம் நீட்டிக் கடிதம் எழுதினர். அதைத்தொடர்ந்து, 2008ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முதல் முறையும், 2011ம் ஆண்டு அதே நவம்பர் மாதம் இரண்டாம் முறையும் இந்த அமைப்பின் உறுப்பினர்கள் சந்தித்துக் கருத்துக்களைப் பரிமாறியிருக்கின்றனர். முதல் முறை அவர்கள் கூடியபோது, இறையன்பு, பிறரன்பு என்கிற கருத்தைப் மையப்படுத்திப் பேசினர். இரண்டாம் முறை பகுத்தறியும் செயல், விசுவாசம் (நம்பிக்கை), மனிதன் என்கிற கருப்பொருளை எடுத்துக்கொண்டு விவாதித்தனர். இம்முறை நவம்பர் 11, 12, 13 ஆகிய மூன்று நாள்கள் உரோமையில் கூடி சேர்ந்து உழைத்து மற்றவர்களுக்குப் பணி செய்வோம் என்கிற கருத்தை முன்னிறுத்தி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். இந்த அமைப்பின் கத்தோலிக்க உறுப்பினர்களுக்குத் தலைவராக கர்தினால் ஜான் லூயிஸ் தவரான் இருக்கிறார். இவர் பல சமய உரையாடலுக்கானப் பாப்பிறைச் சங்கத்தின் பொறுப்பாளர் முஸ்லீம் உறுப்பினர்களுக்குத் தலைவராக ஜோர்டான் நாட்டின் இளவரசர் காஸி பின் முகம்மது என்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவரது உடல் நலமின்மையின் காரணத்தினால் அவருக்குப் பதிலாக ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியத் துறையின் பேராசியர் செய்யது ஹீஸ்ஸெயின் நாசர் தலைமை ஏற்று நடத்தினார். இந்த ஆண்டில் இளைஞர்களின் கல்வியைப் பற்றியும், பல்சமய உரையாடலை எவ்வாறு செயல்படுத்துவது என்பது பற்றியும், வன்முறையை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது பற்றியும் கருத்துப் பரிமாற்றம் செய்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் அவர்கள் ஒருமித்தக் கருத்துடன் பயங்கரவாதம், மற்றவர்களை ஒடுக்க எண்ணும் துடிப்பு, அப்பாவி மக்களுக்கெதிரான வன்முறைக் கலாச்சாரம், பிறரைத் துன்புறுத்தும் மனப்பான்மை, புனித இடங்களை அவமதித்தல், கலாச்சாரச் சின்னங்களை அழித்தல் போன்றவற்றிற்கு எதிராக தங்களின் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

## நமக்குத் தேவை பாலங்கள், சுவர்கள் அல்ல!

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் திருத்தந்தை தனது அலுவலக அறையிலிருந்து மக்களிடம் பேசி, அவர்களுடன் சேர்ந்து மூவேளைச் செபத்தைச் சொல்வது வழக்கம். அந்தச் சந்திப்பின்போது, பெர்லின் சுவர் இடிக்கப்பட்டதின்

இருபத்தைந்தாவது ஆண்டு விழாவை திருத்தந்தை மிக்க மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார். எதையும் எதிர்கொள்ளும் கலாச்சாரம் எல்லா இடங்களுக்கும் பரவிட வேண்டும் என்கிற தம் விருப்பத்தை வெளிப்படுத்தினார். புனித இரண்டாம் ஜான் பால் பெர்லின் சுவர் வீழ்ச்சியுற வேண்டும்என்று விரும்பி அதற்காக அல்லும் பகலும் பெருமுயற்சி செய்தார். மேலும், இன்று உலகத்தைக் கூறுபோட்டு, அழிக்கத் துடிக்க் பிரிவினைச் சுவர்கள் தொடர்ந்து விழுந்து கொண்டிருக்க வேண்டுமென்று இறைவனிடம் திருத்தந்தை மன்றாடினார். எங்கே பிரிவினைச் சுவர்கள் இருக்கின்றனவோ, அங்கே இதயம் முழுவதும் அடைப்பட்ட நிலையில்தான் இருக்கம் என்றும், நமக்குத் தேவை பாலங்கள், சுவர்கள் அல்ல என்றும் திருத்தந்தை கருத்துத் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் நாட்டின் கிறிஸ்தவர்களின் அவலம்

நவம்பர் மாதம் 5ம் நாள் ஒரு முஸ்லீம் கும்பல் கிறிஸ்தவ மறையைச் சேர்ந்த தம்பதியை அடித்துக் கொன்றது. ஏன் அடித்தது? கிழக்குப் பாகிஸ்தானில் முஸ்லீம்களின் புனித நூலாகிய குரானில் இருந்து கிழிக்கப்பட்ட சில பக்கங்களைத் தீயிலிட்டுக் கொளுத்தினர் என்பது அடித்துக் கொல்லப்பட்டவர்களின் மேல் எழுந்த குற்றச்சாட்டு கொல்லப்பட்டவர்களின் உடல்களை செங்கல் சூளையில் போட்டு, அந்தக் கும்பல் எரித்ததாகக் கூறப்படுகிறது.கொல்லப்பட்ட ஷாமா பீபி நான்கு மாதக் கர்ப்பிணி. அவரும் அவரது கணவர் ஷபாஷ் மாஸியும் பஞ்சாப் மாழலத்தில் லாகூருக்குத் தெற்கே 28 மைல்களுக்கு அப்பால் இருக்கும் கோட் ராதா கிஷான் என்கிற கிராமத்தில் உள்ள செங்கல் தொழிற்சாலையில் கொத்தடிமைகளாக வேலை செய்தனர். 1990ம் ஆண்டிலிருந்து இந்நாள் வரை நிறைய கிறிஸ்தவர்கள் குரான் என்கிற முஸ்லீம்களின் புனித நூலை அவமதித்தனர் என்றும், இஸ்லாமுக்கு எதிராகப் பேசினர் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். பல குற்றச்சாட்டுகள் போதிய ஆதாரமில்லாததால் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஒருவர் இஸ்லாமுக்கு எதிராகப் பேசினார் என்று குற்றம் சாட்டப்பட்டாலே அவருக்கு எதிராக ஏதாவது ஒரு கும்பல் வன்முறையை அவிழ்த்து விடுவது பாகிஸ்தானில் மிகவும் சாதாரணமான நிகழ்வு.

## ஆயர்கள் ஓய்வு பெறும் வயது:

மறைமாவட்ட ஆயர்கள், வாரிசு ஆயர்கள், துணை ஆயர்களின் ஓய்வு பெறும் வயது குறித்து ஒரு சட்ட விளக்கத்தை வத்திக்கானின் வெளியுறவுச் செயலர் கர்தினால் பியெத்ரா பரோலின் நவம்பர் மாதம் 5ம் நாள் அறிவித்தார். இந்தச் சட்ட சீராக்கம் வத்திக்கானில் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமையிடத்தில் வெவ்வேறு நிலைகளில் பணிபுரியும் கர்தினால்களுக்கும், பேராயர்களுக்கும், ஆயர் களுக்கும் பொருந்தும். எல்லா ஆயர்களும், துணை ஆயர்களும் 75 வயது நிரம்பியதும் ஓய்வு பெற்றுவிட வேண்டும். ஓர் ஆயரின் ராஜினாமாவை வத்திக்கான் தலைமை ஏற்றுக்கொண்டதும், அவர் தன் நாட்டு ஆயர் பேரவையில் எந்தப் பதவி யிலிருந்தாலும் அதிலிருந்து உடனே விலகிவிட வேண்டும். 75 வயது ஆவதற்கு முன்பே ஒரு கர்தினாலோ, பேராயரோ, ஆயரோ, வாரிசு ஆயரோ, துணை ஆயரோ நோயின் காரணமாக அல்லது வேறு முக்கியக் காரணமாக ஓய்வு பெற விரும்பினால், அவர் தன் பதவியை இராஜினாமா செய்யும் உரிமை அவருக்கு உண்டு.

# அமல அன்னை

உலகப் புகழ் பெற்ற தலைவர்கள் எல்லாம் எட்டு என்ற எண்ணில் தான் தோன்றினார்கள். விண்ணும் மண்ணும் போற்றிடும் அன்னை மரியாளின் பிறந்த நாள் செப்டம்பர் எட்டு என்பதே இதற்கு மிகச்சிறந்த உதாரணம். அதே அன்னை அமல உற்பவியாக அறிவிக்கப்பட்டதும் டிசம்பர் எட்டிலே தான்.

அன்னை மரியாள் ஜென்மப் பாவம் இல்லாமல் புனித அன்னம்மாளின் உதிரத்தில் கருக்கொண்ட நன்னாளே டிசம்பர் எட்டு. இறைவன் தம் மீட்புத் திட்டத்தை மானிடது. அவ்வாறு இறைவன் தேந்துகொண்ட தூய ஆன்மாவே முன்பே அறிந்திருந்தேன்.நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன். (ஏரேமியா-1:5). இறைவன் கருவிலேயே ஒவ்வொரு குழந்தையும் அறிந்து, திருநிலைப்படுத்தினாலும், அன்னை மரியாளை சிறப்பான முறையில் ஆதிப் பெற்றோர்களின் பாவம் அணுகாமல் துயவாராக உருவாக்குகின்றார். ஏனெனில் கடவுள் தம் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற தேர்ந்துகொண்ட அன்னை மரியாளை பெருமைப்படுத்தியதை புனித பவுல் சிறப்பாக எடுத்துரைக்கின்றார். தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார். அழைத்தோரை தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார். தமக்கு ஏற்புடையோரானோரைத் தம் மாட்சியில் பங்கு பெறச் செய்தார் (உரோமையர்-8:30) அன்றும் சரி. இன்றும் சரி. கன்னிப்பெண் கருவுறுவது என்பது சமுதாயத்தில் இழிவாக கருதப்படும் ஒன்று. ஆயினும் அன்னை மரியாள் அழைத்த வரின் உளமறிந்து. இறை வார்த்தையை இதயத்தில் சுமந்து. இறைமகன் இயேசுவை கருவினில் சமந்தார். புனித சூசையப்பருக்கு மணம்முடித்த பின்னும் இந்த கன்னிமை குன்றாமல் இயேசுவை பெற்றெடுத்து, வளர்த்து, சிலுவை மரணத்திற்கு கையளிக்கும் தருணம் வரை தம்மை இறைவனுக்கு மழுமையாக அர்ப்பணித்து, அவருக்கு ஏற்புடையவராக வாழ்ந்து. இறைவன் தரும் மாட்சியில் பங்கு கொண்டார்.



அன்னை மரியாள் பெற்ற இந்த மாட்சியை, திருச்சபை தான் பிரகடனப் படுத்திய சத்திய பிரமாணங்களின் வழியாக நமக்கு எடுத்துரைக்கிறது. ஆம். மரியன்னையின் மாசற்ற தூய்மையை போற்றும் வண்ணம் திருச்சபை அன்னை மரியாளை அமல உற்பவியாக அறிவித்தது.1854 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் எட்டாம் நாள், திருத்தந்தை 9ம் பயஸ் அவர்களால் அன்னை திருநாள், இன்றும் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த நன்னாளில் பொற்பையில் இறைபணியாற்றி சென்ற அருட்சகோதரி சுவீட்லின் அவர்களின் அறிவுரையை பகிர்ந்து கொள்கிறேன்.மாதாவின் பிள்ளை ஒரு போதும் அவலமாய் சாகாது என் மூன்று முறை கூறியபடி தலையின் உச்சியில் சிலுவை வரைந்தால் நம் ஆன்மாவை அமல அன்னை காத்து நிற்பார்கள் என்று கூறினார்கள். ஆகையால் நம் ஆன்மாவை பாவம் அணுகாமல் காத்திட, அன்னை அமலி துணையை நாளும் வேண்டி நிற்போம். அமல உற்பவ மரியே வாழ்க!

– **அ.மிக்கேல் உஷா.** பொற்பை.

# கிறிஸ்துவை வரவேற்போம் நம் உள்ளங்களில்

அஞ்சாதீர்கள், இதோ! மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று வானதூதன் மொழிந்தது மாபெரும் சபைதனில் மமதையுடன் வீற்றிருக்கும் மனிதர்களிடம் அல்ல, மாறாக அன்றாட தேவைகளுக்காக அல்லல்பட்டு உழன்றுகொண்டிருக்கும் ஆட்டிடையர்களுக்கு அல்லவா அந்த மாபெரும் பேறு கிடைத்தது.

ஆம் மார்கழி திங்களில், மனதை உறைய வைக்கும் கடுங்குளிரில் மாட்டுக் கொட்டகையில் அல்லவா ஜெனித்தார் விண்ணக மண்ணக வேந்தனாம் நம் தேவன் இவ்வாறு தேவன் மாட மாளிகையிலோ, கூட கோபுரத்திலோ, கண்ணை பறிக்கும் ஆடம்பர குடில்களிலோ ஜெனிக்க விரும்பவில்லை. மாறாக எளியவர்களின் இதயம்தனில் பிறக்க விரும்புகிறார். அதுவே இறைவன் விரும்பும் நந்தவனம். எனவே, ஒவ்வொருவரும் நம் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் கோபம், எரிச்சல், பழிவுணர்வு, பொறாமை, வைராக்கியம் போன்றவற்றை களைய வேண்டும். மாறாக அன்பு, பரிவு, பாசம், கனிவு, இனிமை, எளிமை, மனிதநேயம் போன்ற விதைகளை விதைத்து இறைவன் உறைய விரும்பும் உறைவிடமாக மாற்ற முயற்சி எடுப்போம்.

கிறிஸ்து பிறப்பு என்றவுடன் விலையுயர்ந்த ஆடை, அணிகலன்கள், மாடமாளிகை போன்ற குடில்கள் அமைப்பதில் காசை விரயம் செய்யாமல் ஒரு வேளை உணவுக்காவும், ஆண்டுக்கு ஒரே ஒரு நல்ல உடைக்காகவும் ஏங்கித்தவிக்கும் எண்ணற்ற சகோதர, சகோதரிகள் நம்மிடையே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்து அவர்களில் முகமலர்ச்சியில் இறைமகன் இயேசுவின் பிறப்பைக் கண்டு மகிழலாம். வாழ்வது ஒருமுறை வாழ்ந்து காட்டுவோம் கிறிஸ்து அவனாய் கிறிஸ்து அவளாய் அனைவருக்கும் இனிய கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள். நன்றி!

நல்லாசிரியை. **G.ரெஜினாள் மேரி,** பொற்பை

## சிண்டர் கிளாஸ்




செயின்ட் நிகோலாஸ் என்ற பாதிரியார் தான் நம் கிறிஸ்துமஸ் தாத்தாவுக்கு முன்னோடி. இந்த செயிண்ட் நிகோலஸ் என்ற பெயர் ஹாலந்து நாட்டில் சிண்டர் கிளாஸ் என்று அழைக்கப்பட்டது. சிண்ட் என்றால் டச்சு மொழியில் புனிதர் என்று அர்த்தம்.கிளாஸ் என்பது நிகோலாசின் சுருக்கம். இவை இரண்டையும் இணைத்து சிண்டர்கிளாஸ் என்று ஹாலந்துகாரர்கள் தாத்தாவை அழைத்து உள்ளனர்.

– D. **சகாயஸ்மைலின்**, பொற்பை.

## கிறிஸ்துமஸ் என பெயர் சூட்டியது....?

ஆசியாவிலுள்ள சிறிய நாடான இஸ்ரேலில் ஜெருசலேம் நகரில் பெத்லகேம் என்னும் இடத்தில் இயேசு பிறந்தார். கி.பி,154ல் திருத்தந்தை ஜூலியசால் முதன்முதல் அறிவிக்கப்பட்டது. கிறிஸ்துமசை பிரஞ்சு மொழியில் நோயல், ஜெர்மனியில் வெய்நேக்ஷன், ஸ்பெயினில் நேவிடட் ஸ்காபலாந்திய யூல், இத்தாலியில் நாடோல்லே என்று அழைப்பர். அமெரிக்காவைச் சேர்ந்த டே என்ற பெண்மணி தான் இயேசு பிறந்தநாளுக்கு கிறிஸ்துமஸ் என்று பெயர் சூட்டினார். -S. **டிவாஸ்,** கோவை.

# முதல் சனி வழிபாடு

திருக்கல்யாணத் தாய் திருத்தலத்தில் அக்டோபர் மாத முதல் சனி வழிபாடு நிகழ்வுகள் 01.11.2014 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை நற்கருணை ஆராதனை வழிபாடு நடைபெற்றது. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாளத்தில் திருப்பலி நடைபெற்றது. 11.00 மணிக்கு தமிழிலும் மலையாளத்திலும் ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு அன்னையின் புகழ் பாக்கள் பாடிக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது.

அதன்பின் நவநாள் ஜெபம் விண்ணப்பங்கள் ஒப்புக் கொடுத்தல் திருப்பலி கருத்துக்கள் ஒப்புக்கொடுத்தல் நடைபெற்றது. 12.00 மணிக்கு 13 குருக்கள் இணைந்து நவநாள் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது.

வருகை தந்திருந்த அனைவருக்கும் காலையில் பொங்கல் அதன்பின் குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும், திருப்பலி நிறைவு பெற்ற பின் திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது. அதன் பின் மாலை 4.00 மணிக்கும் 6.30 மணிக்கும் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

## திருக்குடும்பம்



நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்.

குடும்பம் ஒரு கோயில்,அது இறைவன் வாழும் ஆலயம். அன்பே குடும்பத்தின் அடித்தளமும், ஆணி வேருமாக இருக்கின்றது. எங்கு உண்மையான அன்பு,மன்னிப்பு, ஏற்புடைமை இருக்கின்றதோ அக்குடும்பம் சொர்கமாக திகழ்கின்றது.ஒவ்வொரு குடும்பத்தையும் இணைப்பவரும், காப்பவரும், இறைத்திட்டத்தில் செயல்படுபவரும் இறைவனே. எனவே தனிப்பட்ட ஆசீரால், இறையன்பால் கட்டிக் காக்கின்றார்.ஒருவர், ஒருவரை மதித்து, உணர்வுகளைநெறிப்படுத்தி வாழும் போது குடும்பம் ஒரு பல்கலைக் கழகமாகத் திகழ்கிறது. இறைவன் இவ்விலகில் குழந்தையாகப் பிறக்கும் முன்பே திருக்குடும்பத் தலைவராக நீதிமான் சூசையப்பரையும்,தலைவியாக தேவமாதாமரியாளையும் தேர்ந்தெடுத்து மூவொரு இறைவனின் மாதிரியாக திருக்குடும்பத்தை அமைத்தார்.இயேசுவும்,கன்னிமரியாவும், சூசையப்பரும் வாழ்ந்த குடும்ப வாழ்க்கையைப் பின்பற்றி மனித அன்பின் மேன்மை, மனித மாண்பின் சிறப்பையும் உணர்ந்து மகிழ ஒற்றுமை, அமைதியுடன், அன்புடன் நம் குடும்பமும் வாழ இறைவனிடம் மன்றாடுவோம்.

– **பாத்திமா மேரி** (த.ஆ. பணிநிறைவு பொற்பை.

# புனித சிலுவை அருளப்பர் (1542-1591)



இவர் ஸ்பெயின் நாட்டில் உள்ள போத்திபரோஸ் என்னுமிடத்தில் 1512-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய பெற்றோர் ஏழைகள். எனவே இவருக்கு எந்தத் தொழிலையும் கற்பிக்க அவர்களால் முடியவில்லை. இவர் ஒரு மருத்துவ மனையில் சேர்ந்து நோயாளிகளுக்கு சேவை செய்து வந்தார். 1563-ஆம் ஆண்டில் கார்மேல் சபையில் தம்மை துணைச் சகோதரராக சேர்த்துக் கொள்ளும்படி இவர் கோரினார். அவர்களோ இவரது அபூர்வ திறமையைக் கண்டு 1567-ஆம் ஆண்டு இவருக்கு குருப்பட்டம் கொடுத்தார்கள்.

இவர் கடும் தவவாழ்வை விரும்பி கர்த்தூரியன் சபையில் சேர விரும்பினார். அந்த சமயத்தில் இவர் புனித அவிலா தெரேசம்மாளைச் சந்தித்தார். அவள் இவருக்கு ஒரு நல்ல ஆலோசனை கொடுத்தாள். கார்மேல் சபையில் இருந்து கொண்டு அதே சபையைச் சீர்த்திருத்தும்படி அவரை மன்றாடினாள். கார்மேல் சபையைச் சீர்திருத்தும் வேலையைத் தெரேசாள் தொடங்கியிருந்தாள். இதில் தனக்கு உதவியாய் இருக்கும்படி இவரைக் கேட்டுக் கொண்டாள். இவரும் சம்மதித்தார். இந்த வேளையில் அவருக்கு ஏராளமான துன்பங்களும், வேதனைகளும் வந்தன. அவை அனைத்தையும் இவர் பொறுமையாக சகித்தார்.சிருஷ்டிகளிடமிருந்து பற்றை அகற்ற இந்தத் துன்ப வேதனைகள் அவருக்கு உதவியாய் இருந்தது. ஆண்டவர் பட்ட பாடுகள் மீது இவர் அதிக பக்தி கொண்டு தாழ்மைகளைத் தேடிச் செல்வார். ஒருநாள் நம் ஆண்டவர் இவர் முன் தோன்றி எனக்காக மிக உழைத்திருக்கிறாய். உனக்கு என்ன சன்மானம் வேண்டும்? என்றார். அருளப்பர் அவரைப் பார்த்து ஆண்டவரே உமக்காக நான் வேதனைப்பட்டு நிந்திக்கப்படும் வரம் தாரும் என்றார். இவருக்கு ஒரு பொல்லாத நோய் வந்தது. சிகிச்சையும்,இளைப்பாற்றியும் பெற இரு மடங்களில் ஏதாவது ஒன்றுக்குப் போகலாம் என்று இவரிடம் சொன்னார்கள். ஒரு மடம் சுகமான இடமாகஇருந்தது.அந்த மடத்தின் தலைவர் இவருடைய உற்ற நண்பர். அடுத்த மடம் ஏழை மடமாய் இருந்தது. அந்த மடத்தின் தலைவருக்கு இவர் என்றால் பிடிக்காது.என்றாலும்இயேசுவுக்காக வேதனைப்பட்டு நிந்திக்கப்பட விரும்பிய இவர் பிந்திய மடத்தைத் தெரிந்து கொண்டார். இங்கு இவர் அதிக வேதனைப்பட வேண்டியிருந்தது. திருச்சிலுவையைப் பிடித்துக்கொண்டு 1591-ல் அமைதியாய் உயிர் துறந்தார்.

**சிந்தனை:** ஆன்மாவானது எந்த சிருஷ்டி மீது பற்று வைத்திருக்கிறதோ அந்த சிருஷ்டி போலவே இருக்கும். பற்று அதிகரிக்க அதிகரிக்க சிருஷ்டி போல அது மாறும். ஏனென்றால், நேசிக்கிறவன் நேசிக்கப்படும் பொருளைப்போல இருக்க விரும்புகிறான். எனவே ஒரு சிருஷ்டியை நேசிக்கிறவன் சிருஷ்டியின் மட்டத்திற்குத் தன்னைத் தாழ்துகிறான். சிருஷ்டியை விட இன்னும் அதிகமாக தன்னைத் தாழ்த்துகிறான். ஏனெனில் சமத்துவத்துடன் அன்பு திருப்தியடைவதில்லை. தன்னை அடிமை ஆக்க ஆசிக்கிறது. (புனித சிலுவை அருளப்பர்)

**செபம்:** ஆண்டவரே, நாங்கள் உலகப் பொருட்கள், இடங்கள், ஆட்கள் மீது மிஞ்சிய பற்று இன்றி வாழும் வரம் தாரும்.

– தூயவர்களின் வரலாறு



அருள்தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. கால்வலி நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி – பிரகாசபுரம் ஜெஸி
2. நல்ல வேலை கிடைத்ததற்கு நன்றி – கன்னியாகுமரி சகாய பேனி
3. சுகப்பிரசவம் கிடைத்ததற்கு நன்றி – கன்னியாகுமரி கௌசல்யா
4. குடும்பத் தேவைகள் நிறைவேறியதற்கு நன்றி – வேங்கோடு லீலா
5. காணாமல் போன மகன் கிடைத்ததற்கு நன்றி – பூந்துறை ரோனிசன் அஜித்
6. வெளிநாட்டில் நல்ல வேலை கிடைத்ததற்கு நன்றி – விழிஞம் ஜாண்பால்
7. தைராய்டு நோய் குணமடைந்ததற்கு நன்றி – கண்டன்விளை ஜெஸிமா
8. சிறுநீரக நோய் குணமடைந்ததற்கு நன்றி – வள்ளவிளை ரீமா
9. நினைத்தக் காரியம் நடந்ததற்கு நன்றி – விழிஞம் ஆண்டனி
10. கொடுத்த பணம் திரும்ப கிடைத்ததமைக்கு நன்றி – உவரி கில்டா
11. கப்பலில் வேலைகிடைத்த்மைக்கு நன்றி – குருசடி ஜாண் அபித்
12. நோய் நீங்கி நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – இணையம் வின்னி
13. குடும்ப சமாதானம் கிடைத்தமைக்கு நன்றி – புல்விளை ஸ்டெல்லா
14. அரசு வேலை கிடைத்ததற்கு நன்றி – சென்னை லீமாரோஸ்
15. தொழில்வளம் கிடைத்தமைக்கு நன்றி – இணையம் இம்மானுவேல்
16. நல்ல இல்லம் கிடைத்தமைக்கு நன்றி – செம்பருத்திவிளை, ஜாண்
17. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி – கன்னியாகுமரி மிக்கேல்ராஜ்
18. பாஸ்போட் கிடைத்தமைக்கு நன்றி – திருமுகளகர் ரமேஷ்
19. சாத்தான் தொலீலை தீர்ந்தமைக்கு நன்றி – கேரளா மஞ்சு
20. குடிப்பழக்கம் தீர்ந்தமைக்கு கோடி நன்றி – இணையம் சுஜீமோன்
21. குழந்தை பாக்கியம் கிடைத்தமைக்கு நன்றி – மிட்டாதார்குளம் எல்னா
22. முகத்தில் உள்ள கட்டி மறைந்தமைக்கு நன்றி – ஜோதிக்காவிளை ரஞ்சித்
23. தீராத நோய் நீங்கி நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – பொழியூர் சிறியபுஷ்பம்
24. தொலைந்த சான்றிதழ் கிடைத்தமைக்கு நன்றி – அடைக்கலாபுரம் விக்டர்

25 V.K.C போட் தொழில்வளத்திற்கு நன்றி – இணையம் V.K.C.

26. விபத்திலிருந்து உயிர் காத்தமைக்கு நன்றி – குதிரைபந்தி விளை மோகன்
27. குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையானதற்கு நன்றி. –பொற்பை சே.சகாயராஜா
28. பிரசவத்தில் தாயையும் சேயையும் நலமாக காப்பாற்றியதற்கு நன்றி
–பொற்பை A.பட்டுபுஷ்பா

# கவிதைச் சோலை

## நம் தாய்..!

அன்பின் தாயவள்
ஆரோக்கியம் தருபவள்
இல்லை என்றுசொல்லாதவள்
ஈகை குணம் கொண்டவள்
உலகிற்கெல்லாம் தாயானவள்
ஊருக்கெல்லாம் படியளப்பவள்
என்றும் நம்மைக் காப்பவள்
ஏழைகளுக்கு இறங்குபவள்
ஐம்புலன்களை அடக்குபவள்
ஒற்றுமையை என்றும் வளர்ப்பவள்
ஓங்கார ஓசையுடன் வருபவள்
ஔடதம் போல் மருந்தானவள்
அவளே நம் திருக்கல்யாண தாய்

**டெ. மைக்கிள் மனோ**

## ஆனந்த கிறிஸ்துமஸ்

அடைமழை பெய்யும் ஐப்பசியில்
ஆண்டவன் வரவிருப்பாய் காத்திருந்து
இருள் சூழ் மார்கழி பனியினிலே
ஈசனின வரவை கொண்டாட
உன்னதர் இயேசு பாலனை
ஊக்கத்தோடு பற்றிக்கொள்ள
என்றும் வாழும் இறையவனுள்
ஏகாந்த வாழ்வில் இணைந்து வாழ
ஐயன் இயேசு பிறந்த நாளில்
ஒய்யாரமாய் ஒளி தீபம் ஏற்றி
ஓயாது புகழும் வான்தூதர் போல்
ஔடதமாம் இறைவார்த்தை தியானி
அஃதே நமக்கு ஆனந்த கிறிஸ்துமஸ்

**S. நிர்மலா ராணி**

## ÖçÅÃVé [

இரும்பான நெஞ்சிலும்
ஈரங்கள் கசியவே இறைபாலன்
தோன்றினாரே

1. அன்னைமரி பாலனாய்
அவனி வந்த வேந்தனே
மண்ணகத்தில் உந்தனின்
நன்மைகள் தான் பெருகின

2. மெய்மறையாம் கிறிஸ்துமஸ்
அன்பைச் சொல்லும் தத்துவம்
ஒன்றிணைந்து வாழவே
சொன்ன வார்த்தை நித்தியம்

3. பிறர் நேசத் தன்மை தான்
உறவின் உண்மை நெறியென
பாருக்கெல்லாம் பகர்ந்திட
பெத்தலையில் தோன்றினார்

4. நற்செய்தி நல்கிய
நன்னெறியின் நாயகன்
மீட்பர் இயேசு பாலனை
வணங்கி இன்று மகிழ்வோம்

**S. டிவாஸ்**

## அன்னையின் கரம்.

இறை மகன் இயேசுவை
இன்பமாய் உலகுக் கீந்து
இப்படி வாழ வேண்டு மென
இப்பு விக்கு கற்பித்து
இரு ஐந்து நாட்களில்
இணைந்து திருவிழாவில்
இன்னல்கள் நீங்கிடவே
இனிப்பான வரம் அருள்வாய்
இமயம் போல் பொங்குது உம்புவாழ்
இமயமென உயருது உம் அருள்
இடம் கொள்ள பக்தர் கூட்டம்
இருள் நீக்கும் அன்னையின் கரம்.

**- D.ஜோஸ்பின்மேரி தாசன்**

## பொற்பை நகர் தாயே!

புனித மரி அன்னையிடம்
புகலிடம் தேடி வந்தோம்
புதல்வர்களாக வாரி அனைத்து
புன்னகையோடு அனுப்பிய தாயே
பொற்பை நகரினையே – நினை
பொற் கரங்களால் ஆசி அருளி
பொக்கிஷமாம் உம் அருளை
பொங்கி வரும் பக்தருக்கருள்வாய்

**-T. சுகிர்தமணி அன்பரசன்,**

## நம்பிக்கை

வளர் பிறை நிலவு
தேய் பிறைக்கு நம்பிக்கை
வானில் மழைத்துளி
பூமிக்கு நம்பிக்கை
முள்ளில் ரோஜா
மலர்களுக்கு நம்பிக்கை
நிலையான ஊன்றுகோல்
படரும் பசுங்கொடிக்கு நம்பிக்கை
அன்பான தாயின் பிடிமானம்
நடைபயிலும் குழந்தைக்கு நம்பிக்கை
வேண்டும் வரம் தரும் திருக்கல்யாணத்தாய்
நம் அனைவருக்கும் மாறாத நம்பிக்கை.

-**டே.கீர்த்திகா**, வெள்ளக்கோவில்.

## கல்வி!

இதயம் துடிக்க மறுத்துவிட்டால்
உயிர் கிடையாது
மெழுகு உருக மறுத்து விட்டால்
வெளிச்சம் கிடையாது
சூரியன் உதிக்க மறுத்து விட்டால்
ஒளி கிடையாது
மழை பொழிய மறுத்து விட்டால்
பசுமை கிடையாது
அதைப் போல
மாணவச் செல்வங்களே
இன்று படிக்க மறுத்து விட்டால்
நாளை நல்ல எதிர்காலம் கிடையாது.

-**ஜோஸ்பின்**, பொற்பை.

## பூவியெங்கும் பூவாசம்

**இதோ கன்னி பெண் கருதாங்கி ஒரு மகனை பெற்றெடுப்பாள். இசை. 7:14**

இறைவன் மண்ணுலகிற்கு தந்த இரு பொன் மலர்கள். பரிசுத்த கன்னி மரியாள். ஏக திருமகனை பெற்றெடுத்து ஜீவஜோதியாக இவ்வுலகின் ஒளியை காட்டியவர். தன் திருமகனை கையிலேந்தி அருள்மழை பொழிய செய்கிறார். ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப்படுத்துகின்றது. லூக். 1:47.

இறைவனின் கைவண்ணங்களை எடுத்துரைக்கும். வானிலவும் வால்நட்சத்திரம். இராஜாதி இராஜன் வருகையை முன்னே அறிவிக்கின்றன. வெள்ளியென மின்னி ஜொலிக்கும் சுடரும் மீட்பரின் வருகையால் வானதூதர்கள் யாழினை மீட்டி பாடி மகிழ்கின்றனர்.

இயற்கைவளம் பொழிகின்ற சோலைவனமாக மாபரனின் வருகையை ஆனந்தமுடன் வருகையின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. தூவி விழும் பனித்துளி சாரல்களும் பச்சைக் கம்பளம் விரித்தால் போல் புல்வெளிகளும் தென்றல் காற்றாக வீசி அசைந்திருக்கின்றன.

### திருமகனின் பிறப்பிடம்

இதோ கடவுளின் உறைவிடம் மனிதர்களின் நடுவே உள்ளது. திரு வெளி. 21:13

வானதூதர் கிறிஸ்துவின் பிறப்பை. பெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தியாக அறவித்தார். மீட்பராகிய யேசு பெத்தலகேமில் மாட்டுத்தொழுவத்தில் பிறந்துள்ளார். தீவன தொட்டியில் கந்தைத்துணியால் பொதியப்பட்டு, கிடத்தப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். இவ்வார்த்தையைக் கேட்டு அவர்கள்விரைந்து சென்று குழந்தை யேசுவை வணங்கி ஆராதித்தனர். மாட்டு தொழுவமே திருமகனின் பிறப்பிடமானது. அல்லேலூயா

-**செல்வம்மாள்,** பொற்பை

சென்ற மாதத்தின் தொடர்ச்சி....

# செக்காரியா-எலிசபெத்து குடும்பம்

-ரா. பங்ராஸ், ஆசிரியர், பொற்பை.

**செக்கரியா - எலிசபெத் குடும்பத்தின் நிந்தை மாறியது**

எலிசபெத் கருவுற்று 5 மாதமளவும் பிறர் கண்ணில் படாதிருந்தார். எலிசபெத் கூறியது மக்களுள் எனக்கிருந்த இகழ்ச்சியை நீக்க ஆண்டவர் என்மீது அருள் கூர்ந்தார் பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்.மக்கள் பேறு ஆண்டவர் அளிக்கும் பரிசில் ( திரு : 127-3).

**வானதூதர் மரியாளிடம் எலிசபெத்தை குறித்து பேசுதல்**

வானதூதர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடை யவருக்கு மணஒப்பந்தமான மரியாவிடம் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை கூறியபோது மரியா வானதூதரிடம் இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே! என்றார். வானதூதர் மரியாவிடம், தூய ஆவி உம்மீது வரும்.உம்மிடம் பிறக்கபோகும் குழந்தை தூயது. உம் உறவினராகிய எலிசபெத்தும் முதிர்ந்த வயதில் ஒரு மகனை கருத்தரித்திருக்கிறாள். கருவுற இயலாதவள் என்று சொல்லப்பட்ட அவளுக்கு இது 6 ம் மாதம்.

**மரியாள் எலிசபெத்தை சந்தித்தல்**

மரியாள் எலிசபெத் வீட்டை,அடைந்துஎலிசபெத்தை வாழ்த்தினாள். மரியாளின் வாழ்த்தை கேட்டபோது அவள் வயிற்றில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். எலிசபெத் உரத்தகுரலில் மரியாளைப்பார்த்து, பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர். உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிபெற்றது . என்ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? என்றாள். மரியாள் ஏறக்குறைய 3 மாதம் எலிசபெத்தோடு தங்கி இருந்தார். பின்னர் தம்வீடு திரும்பினாள்.

**செக்கரியா வாய்திறந்து நாவு கட்டவிழ்தல்**

எலிசபெத்துக்கு பேறு காலம் நெருங்கியதும் ஒரு மகனை பெற்றாள். எட்டாம் நாளிலே, குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய சுற்றி வாழ்வோரும் , உறவினரும் வந்தார்கள். செக்கரியா என்ற அவன் தந்தை பெயரை சூட்ட இருந்தனர். ஆனால் எலிசபெத் அவனுக்கு யோவான் என பெயரிடவேண்டும் என்றாள்.அதற்கு அவர்கள் உம் உறவினில் இப்பெயர் கொண்டவர் ஒருவரும் இல்லையே என்று சொல்லி செக்கரியா விடம் சைகை மூலம் காட்டி கேட்டனர். அவர் ஒரு எழுது பலகை ஒன்றை கொண்டு வரச் சொல்லி பலகையில் யோவான் என்று எழுதினார். அப்போது அவர் வாய் திறந்து நாவு கட்டவிழ்ந்து தூய ஆவியால் ஆண்டவருக்கு புகழ் பாடினார்.

**யார் இந்த யோவான் :**

குழந்தையாய் இருந்த யோவான் வளர்ந்து மனவலிமை பெற்றான். இஸ்ரயேல் மக்களுக்கு தம்மை வெளிப்படுத்தும் காலம் வரை அவர் பாலை நிலத்தில் ஒட்டக முடியை ஆடையாக அணிந்து, தோல்கச்சையை இடையில்கட்டி வாழ்ந்து வந்தார். ஆண்டவ ருடைய வழியை செம்மையாக்குங்கள் என பாலை நிலத்தில் குரல் ஒன்று கேட்கிறது என்று இறைவாக்ினர் எசாயா உரைத்தது இவரைபற்றியே.அவர் கடவுளின் வாக்கை பெற்றவர். பாவமன்னிப்பு அடைய மனம்மாறி திருமுழுக்கு பெறுங்கள் என்று யோர்தான் நதிக்கரையில் பறை சாற்றியவர் இவரே. யூதேயா மற்றும் எருசலேம் மக்கள் யாவரும் அவரிடம் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அவரிடம் திருமுழுக்கு பெற்று வந்தனர் (மாற்கு 1-5) இயேசுவுக்கும் திருமுழுக்கு கொடுத்தவரும்இவரே. மனிதராய் பிறந்தவர் களில் திருமுழுக்கு யோவானை விடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை (மத் 11-11).



# எனது கிராமம்

– ம. ஜேசுதாசன்
(முன்னாள் தலைவர்,
தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி)

கத்தோலிக்க கிறிஸ்துவ மதத்தைத் தழுவி பொத்தக்காலன்விளை கிராமத்தில் குடியேறிய ஆரம்பகால குடும்பங்களில் மரிய சவரிமுத்து நாடார் குடும்பமும் ஒன்று. இவர் ஒரு பெரிய நிலக்கிழார். இவருக்குபல ஏக்கர் நிலமும்,அவற்றில் பனை மர தோட்டமும், புளிய மரமும் ஏராளம் இருந்தன. அதனால் அவர் நிலமக்காரர் என அழைக்கப்பட்டார். இவருடைய துணைவியார், அன்னை மரியாளின் தீவிர பக்தை. இவருக்கு கிராமத்தில் இருந்த அன்னையின் ஓலைக்கோவிலை எடுத்துவிட்டு நல்ல ஒரு கட்டிட ஆலயமாக மாற்றிட வேண்டுமென்ற தீராத ஆசை. தன்னுடைய விருப்பத்தை கணவரிடம் கூற, அவரும் அன்னைக்கு ஆலயம் கட்ட தன்னுடைய நிலத்திலிருந்து ஒரு பகுதியை தானமாகக் கொடுக்க முன் வந்தார்.

ஊர் மக்களும் இந்த தான நிலத்தை ஏற்றுக் கொண்டு அன்னைக்குஅன்றைய தேவைக்குத் தகுந்தவாறு ஒரு அழகான ஆலயத்தை கட்டினார்கள். இப்போது உள்ள ஆலயம் போலவே பலிபீடத்தை ஒட்டி வடக்கும் தெற்கும் இரு அரங்குகளும் பீடத்திற்கு நேரே கிழக்கே நீண்ட மண்டபம் என சுமார் 300 பேர் அமரக்கூடிய அளவுக்கு ஆலயத்தை அமைத்தார்கள்.

வெளி உதவி எதுவும் இன்றி ஊர் மக்களின் அன்பளிப்பாலும், சிறுவர் முதல் பெரியவர் வரை அனைத்து மக்களின் உடல் உழைப்பாலும் உருவாக்கப் பட்டது. இந்த ஆலயம் 1840- லிருந்து 1850-ம் ஆண்டு வரையில் உள்ள காலகட்டத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் தேவையைக் கருதி ஆலயத்தை ஒட்டி கிழக்குப் பகுதியில் சுமார் 50 பேர் அமரக்கூடிய ஒரு அரங்கும், அதை ஒட்டி கிழக்கே ஒரு மேடையும் கட்டப்பட்டன. ஆலய மணி மேடைக்கு கிழக்கே இருந்த பெரிய புளிமரத்தில் இரண்டு பெரிய மரக்கட்டைகளால் மேடை அமைக்கப்பட்டு, அதில் தொங்கவிடப்பட்டிருந்தது. அதை ஒட்டி தெற்குப் பகுதியில் ஒரு கிணறு தோண்டப்பட்டு கோயில் கிணறு என அழைக்கப்பெற்றது. இந்தக் கிணறு தான் ஊரிலுள்ள அனைவருடைய குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்த ஜீவ ஊற்று. இந்த கிணற்றுக்கு சில சிறப்பு அம்சங்கள் இருந்தன.

அந்தப் பகுதியில் இருந்த கிணறுகளில் எல்லாம் தண்ணீர் துவர்த்து சுவை குறைந்தாலும் கோயில் கிணறின் தண்ணீர் சுவை எந்தக்காலத்திலும் குறைந்ததில்லை. அதேபோல, பெரிய வறட்சி காலங்களிலும் கூட இந்த கிணற்றில் தண்ணீர் வற்றியதில்லை. கிணற்றில் அடியில் மேற்குப் புரத்திலிருந்து ஒரு நிலத்தடி நீரோட்டம் இருந்ததாகவும், அந்த நீரோட்டத்தின் வேகத்தை கட்டுப்படுத்த ஒரு பெரிய அம்மிக்கல்லை வைத்து அடைத்து வைத்ததாகவும் ஒரு பேச்சு வழக்கு உண்டு.

கிணற்றின் மேலிருந்து பார்த்தால் அந்த அம்மிக்கல் தெரியும். இன்று அந்தக் கிணற்றின் மேற்பகுதி மூடப்பட்டு உள்ளது.

புதிய ஆலயம் கட்டுவதற்கு நிலம் கொடுத்து உதவிய நிலமக்காரருக்கு ஊர் மக்கள் நன்றிக்கடனாக அவருக்கு கோவில் திருவிழாவின் போது முதல் மரியாதை செலுத்த தீர்மானித்தனர். ஜனவரி மாதத்தில் நடைபெறும் மாதாவின் திருவிழாவின்போது முதல் நாள் மாலையில் கொடியேற்றத்திற்கு பிறகு ஊர்மக்கள் எல்லோரும் கோவில் மேடையில் கூடுவார்கள். அப்போது அன்னை மரியாளின் நிச்சயதார்த்தத்தை குறிக்கும் வகையில் தமிழர் மரபுப்படி மங்கலமாக எல்லோருக்கும் வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு கொடுப்பது வழக்கம். அன்று நிலமக்காரருக்கு முதலில் வெற்றிலை பாக்கு கொடுத்து மரியாதை செய்வது என ஊர் மக்கள் தீர்மானித்தனர்.

இந்த மரியாதை நிலமக்காரார் மரிய சவரிமுத்து நாடாருக்கு மாத்திரமல்ல, காலா காலத்திற்கும் அவருடைய சந்ததியினருக்கும் கொடுப்பது என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, ஒரு கட்டு வெற்றிலையோடு ஏழு ராத்தல் (அன்றைய எடை) பாக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த சம்பிரதாயம் 100 ஆண்டுகளுக்கு மேல் எந்தவித தடையின்றி கடைபிடிக்கப்பட்டது. ஆனால் 1960 வாக்கில் கிராமத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. நாடு சுதந்திரம் பெற்று ஜனநாயகக் கொள்கைகளும், சுயமரியாதைக் கொள்கைகளும் அதிகமாகப் பேசப்பட்ட நிலையில் புதிய தலைமுறையினர் இந்த சம்பிராதாயத்தைப் பற்றி கேள்விகள் கேடக ஆரம்பித்தனர். நிலமக்காரர் குடும்பத்திற்கு முதல் மரியாதை செய்யும் முறையை நிறுத்த வேண்டும் என்ற கோபம் படிப்படியாக உயர்ந்து, இறுதியாக 1963-ஆம் ஆண்டு அந்த சம்பிரதாயம் அடியோடு நிறுத்தப்பட்டது. ஊர் மக்களுக்கு வெற்றிலை பாக்கு வினியோகிக்கும் பழக்கமும் நின்று போனது.

பின்னாளில் 1979-ம் ஆண்டு தந்தை நவமணி அடிகளார் பொறுப்பேற்றபின் கொடியேற்ற நாளன்று ஊர் மக்களுக்கு வெற்றிலை பாக்கு கொடுக்கும் பழக்கத்தை மீண்டும் துவக்கி வைத்தார். ஆனால் அவருக்குப்பின் (1982) இந்தப் பழக்கமும் நின்று போனது. காலம் காலமாக தலைமுறை தலைமுறையாக தங்களுக்கு கிடைத்து வந்த விசேஷ மரியாதை திடீரென நிறுத்தப்பட்டதும் நிலமக்காரரின் வாரிசுகள் அதிருப்திபட்டு தங்களது எதிர்ப்பை பல வகையிலும் வெளிப்படுத்தினார்கள். என்றாலும் இறுதியில் கிராமத்தின் பெரும்பாலோர் விருப்பத்தை மதித்து மாற்றத்தை ஏற்றுக் கொண்ட நிலமக்காரரின் வாரிசுகளை பாராட்டத்தான் வேண்டும்.



நிலமக்காரர் மரிய சவரிமுத்து நாடார் 19-ம்

நூற்றாண்டின் இறுதியில் இறந்திருக்க வேண்டும். தன்னுடைய சொத்தில் ஒரு பகுதியை கோவிலுக்கு நன்கொடையாக கொடுத்த பிறகும், ஏராளமான நிலபுலன்களோடு வசதியாக வாழ்ந்தார். அவருடைய மகன் சூசைமரியான் நாடார் தகப்பனாரின் சொத்துகளை ஆண்டு அனுபவித்து வந்தார். இவருக்கு 5ஆண்கள், இரண்டு பெணகள் பிறந்தார்கள்.

இவர்களில் யாரும் இன்று உயிருடன் இல்லை. இந்த 7 பேர்களின் பிள்ளைகளில் ஒரு சிலரும் அடுத்த தலைமுறை அதற்கும் அடுத்த தலைமுறை (5வது மற்றும் 6வது தலைமுறை) என பலரும் நிலமக்காரர் குடும்பம் என்ற அடைமொழியோடு கிராமத்தில் சிறப்போடு வாழ்ந்து வருகின்றனர்.

நிலமக்காரர் கோயில் கட்டுவதற்கு நிலம் அன்பளிப்பாக அளித்த அதே கால கட்டத்தில் இன்னொரு குடும்பமும் (சந்தனச்சிலுவை நாடாரின் முன்னோர்கள்) கோவிலுக்கும், கோவிலைச்சுற்றி வாழ்ந்த குடும்பங்களின் தேவைக்கும் நிலம் அன்பளிப்பாக கொடுத்துள்ளது. அந்த குடும்ப வாரிசுதாரர் ஒருவரின் சுற்றுப்படி, அவருடைய முன்னோர்கள்சுமார் 45 சென்ட் சொந்த நிலத்தையும்,அதை ஒட்டி இருந்த நத்தம் நிலத்தையும் கோவிலுக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள். ஆனால் இரண்டு குடும்பங்கள் நிலம் தானம்கொடுத்திருக்கையில், ஒரு குடும்பத்திற்கு மாத்திரம் ஏன் முதல் மரியாதை கொடுக்கப்பட்டது என்ற கேள்வி எழுகிறது. என்னுடைய யூகம் என்னவென்றால், நிலமக்காரர் ஆரம்பத்தில் கோவிலுக்கு நிலம் கொடுத்தது, அதில் ஆலயத்தை கட்டி ஊர்மக்கள் நிலமக்காரருக்கு முதல்மரியாதை கொடுப்பது என்ற தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும்.

அதற்குப்பின் பின்னாளில் சந்தனச்சிலுவை நாடார் குடும்பம் நிலமக்காரரின் நிலத்தை ஒட்டி இருந்த தங்களுடைய நிலத்தையும் கோவிலுக்கு கொடுத்திருக்க வேண்டும். ஆக, தற்போது உள்ள ஆலயம், ஆலய வளாகம், பங்குக்குருவானவர் இல்லம், கன்னியர் இல்லம், தேர்வீதிகள் மற்றும் வடக்கே உள்ள பள்ளிகள் வளாகம் இவை எல்லாமே மேற்சொன்ன இரண்டு குடும்பங்கள் அன்பளிப்பாக கொடுத்த நிலத்தில்தான் அமைத்துள்ளன.

பழைய கோவில் கட்டியபோது அதைச்சுற்றி கிழக்கிலும் தெற்கிலும் பலர் வீடு கட்டி குடியிருந்தனர். அப்படி வீடு கட்டி வாழ்ந்த குடும்பங்கள் 25-30 இருக்கும். புதிய ஆலயம் கட்டி முடிந்து வரும் தருவாயில், இந்த குடும்பங்கள் தங்கள் வீடுகளை ஊரில் வேறு இடங்களுக்கு மாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஒரு சிலர் தாங்களாகவே முன் வந்து வேறு இடங்களில் மனை வாங்கி சென்று விட்டனர். மற்றவர்களுக்கு கோவில் நிர்வாகத்தால் மாற்று மனை கொடுக்கப்பட்டு அவர்கள் அங்கு குடியேறினர்.

அந்த மக்களின் இந்த தியாகமும் ஒத்துழைப்பும் மகத்தானது. அவர்களது பூரண ஒத்துழைப்பால் கோவில் வளாகம் சீரமைக்கப்பட்டு புதிதாக மதில் சுவரும் கட்டப்பட்டது. இதனால் கோவில் வளாகமும், தேர்வீதியும் இன்று அற்புதமாக அமையப்பெற்றுள்ளன.

இந்த நிகழ்வுகளிலிருந்து ஒரு கருத்தை உறுதியாகக் கூறலாம். அன்னை மரியாளுக்கும்,அவருடைய ஆலயத்திற்கும் அள்ளிக் கொடுக்கும் குணம் இன்று நேற்று தோன்றியதல்ல. இந்த கிராமத்தில் மக்கள் குடியேறிய நாளிலிருந்து தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்பட்டு வரும் வழக்கம். இது அந்த கிராம மக்களின் ரத்தத்தில் ஊறியப்போய்விட்டது என்றே கூறவேண்டும்.

# மீட்பின் பேழை



யோவான் -1-14 வாக்கு மனிதரானார் என்றும் பிலிப் 2-6,7,8 பாவிகளாகிய நம்மை மீட்பதற்காக, நம் மீட்பர் இயேசு தெய்வத் தன்மையை விட்டு விட்டு, மனிதத் தன்மையை உதறிவிட்டு மனிதத் தன்மைக்கு வந்தார். இறைவனுக்கு கீழ்படிந்து , தன்னை முழுவதும் தாழ்த்தி அடிமையின் கோலம் பூண்டார். நம் பாவங்களுக்காக அவர் சபிக்கப்பட்டவர் ஆனார். நம் பாவத்திற்காக சிலுவைச் சாவை ஏற்றார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். சதாகாலமும் நம்திருக் கல்யாணமாதா திருத்தலத்தில் நற்கருணையில் நம் மீட்பர் வீற்றிருக்கின்றார். தி.பா. 121 -4 இதோ இஸ்ராயேலைக் காக்கின்றவர் கண்ணயர்வதுமில்லை. தூங்குவதுமில்லை. நமக்கு இரட்சண்யம் தருகின்ற மீட்பரின், மீட்பின் பேழைதான் நம் திருக்கல்யாணத்தாய்.

ஏசாயா 9-2 காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். ஏசாயா 25-9 இவருக்காகவே காத்திருந்தோம். இவர் தரும்மீட்பில் நாம் மகிழ்ந்து அக்களிப்போம் என்ற இறை வார்த்தைக்கேற்ப உலகுக்கு உதவ, பாவிகளை மீட்க , மாந்தர் நாம் மீட்பு பெற, சிலுவைச் சாவுக்கு தன் ஒரே மகனைக் கையளித்தார் மீட்பின் பேழையான நம் அன்னை மரியாள். மரியாள் என்பதற்கு மறுபெயர் உதவி . மீட்பின் பேழை பகட்டு அல்ல. பணிவின் பாடம். இறை திட்டம். தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தில் அன்பு இருக்கும். தாழ்ச்சியின் அன்னைதான் நம் அன்புத்தாய் திருக்கல்யாணத்தாய்.

ஒரே வார்த்தையால் ஒளி உண்டாகட்டும், ஆகட்டும், தோன்றட்டும் எனவும், இரையாதே என புயல் அடக்கவும், நோய் நீங்குக,எழுந்திரு லாசரே வெளியேவா! என உத்தரவிடுகின்ற வல்லமையுள்ள இறைவன் நம் மீட்பின் பேழையாம் அன்னையிடம் மட்டும் அருள் நிறைந்தவளே வாழ்க ! ஆண்டவர் உம்முடனே! என பணிவுடன் இறைத்திட்டத்தை அறிவிக்கின்றார். எனவே மீட்புத் திட்டத்திற்கு பேழையாக அன்னை மரியாளைத் தேர்ந்து கொள்கிறார். மரியாள் பரிசுத்த மீட்பின் பேழை. 2 சாமு.6-7 பரிசுத்தமில்லாமல் கடவுளின் பேழையைத் தொட்ட மாத்திரமே உசா ஆண்டவரால் வீழ்த்தப்பட்டான் என வேதம் சொல்கிறது பரிசுத்த ஆவிக்கு எதிரான பாவங்கள் இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படாது என்ற இறைவார்த்தையின் படியே, பரிசுத்த ஆவியைத் தாங்கிய மீட்பின் பேழையாம் பரிசுத்த தாய்க்கு எதிராகப் பேசும் எந்த ஒரு மனிதனும் கூட மன்னிக்கப்பட மாட்டான் என்பதை உணர்ந்து இறைவார்த்தையை நாமும் கேட்டு, சிந்தித்து,அதன்படி வாழ்ந்து நம் மீட்பின் பயனை அடைய நம் மீட்பின் பேழையாம், திருக்கல்யாணத் தாயின் வழியாக இறைவனிடம் நம்மை ஒப்புக் கொடுப்போம்.

மீட்பின் பேழையே நீ வாழ்க!

-Y.V.R. ரோஸ், சென்னை - 106

# அமைதியைப் பரப்பும் சீயோனாக மாறுவோம்....

பேரருட்திரு. முனைவர். **R.ஜோசப் ரவி பாலன்**

பழைய ஏற்பாட்டில் நூற்றைம்பது, தடவைகளுக்கு மேல் சீயோன் என்கிற எபிரேய வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்காலத்தில் நம் கோவில்களிலும், மக்கள் அதிகமாகக் கூடும் செபக் கூட்டங்களிலும் இந்த வார்த்தை மிகச் சாதாரணமாய்ப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வார்த்தையின் உண்மையான பொருள் என்ன? இதற்குச் சரியான பதிலைத் தெரிவிக்க முடியாத நிலையில்தான் விவிலிய அறிஞர்கள் இருக்கின்றனர். இந்த வார்த்தை கோட்டை அல்லது அரண் என்கிற அர்த்தத்தைக் கொண்டிருக்கலாம் என்று பொதுவாக அறிஞர்களால் கருத்து சொல்லப்படுகிறது.

சீயோன் என்கிற இந்தக் கோட்டை எருசலேமில் உயரமான ஓரிடத்தில் அமைந்திருந்தது. அதனருகிலேயே எருசலேமுக்குத் தண்ணீர் கொண்டு வரும் குடைகால்வாய் இருந்ததாக எருசலேமின் முற்காலத்துப் புவியியல் அமைப்பிலிருந்து அறிய வருகிறோம். (காண்க. 2 சாமு 5:8)

சீயோனிலிருந்து ஆறுகள் பாய்ந்து வந்ததாக (எசே 47:1) வாசிக்கிறோம். ஆனால் உண்மையில் அங்கு ஆறுகள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. சீயோன் கோட்டை உயரமான இடத்தில் அமைந்திருந்ததால் அந்த இடம் மலை என்றும் அழைக்கப்படுகிறது. தம் முப்பதாம் வயதில் இஸ்ரயேலரின் அரசரான தாவீது ஆரம்பத்தில் ஏழு ஆண்டுகள் ஆறு மாதங்கள் எபிரோனில் தங்கி ஆட்சி செய்தார்; மீதமுள்ள முப்பத்து மூன்று அண்டுகள் எருசலேமிருந்து ஆட்சி செய்தார் (2 அர 5:4-5). எருசலேம் முதலில் எபூசியர்கள் வசம் இருந்தது. அதன்மீது கவனம் செலுத்திய தாவீதுஅரசர் தம் ஆட்களை அனுப்பி,எளிதில் அதை வென்றார்.(2 சாமு 5:6-10). சீயோன் அருகிலிருந்த குடைகால்வாய் மேலேறி, தாவீதின் ஆட்கள் எருசலேமுக்குள் சென்று, நகரின் வாயில் கதவுகளை உட்புறத்திலிருந்து திறந்திருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. தாவீது பிறந்தது பெத்லகேமில் (1 சாமு16:1-13). ஆனால் எருசலேம்தான் தாவீதின் நகரம் என்று வரலாற்றில் பெயர் பெறுவதைக் காணலாம்(1சாமு 16:1, 11-13).

சீயோனில் எருசலேம் கோவிலும், அதனருகில் அரசரின் அரண்மனையும் கட்டப்பட்டதாய் அறிகிறோம். தொடக்கத்தில் கோட்டையாகக் கருதப்பட சீயோன் பிற்காலத்தில் எருசலேம் கோவில், எருசலேம் நகரம் ஆகியவற்றையும், யூதா நாட்டையும், சுட்டிக்காட்டுவதாய்ப் பார்க்கிறோம். திருப்பாடல்களில் உள்ள சீயோன் பாடல்களில் சீயோனின் பெருமை வருணிக்கப்படுகிறது. சீயோன் கடவுளின் திரு மலையாகவும் (திபா 26), கடவுள் வாழும் இடமாகவும் (திபா 46:4) பார்க்கப்படுகிறது. மக்களின் பாதுகாப்பிற்கு சீயோன் மலை உத்திரவாதம்-வழங்குகிறது (திபா 125). கடவுளின் நகரம் சீயோன் மலையில் அமைந்துள்ளது என்றும் (திபா 48:1-2) சொல்லப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் திருச்சபை சீயோன் மலையுடன் ஒப்பிடப்படுகிறது (திவெ 13:22; 14:1).

இறைவாக்கினர்களும் சீயோனின் பெருமையை உணர்ந்ததோடு, அது குறித்து உறுதியுடன் மக்களிடம் பேசினர். குறிப்பாக, கி.மு.எட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் எருசலேமைத் தலைநகரமாகக் கொண்ட தென்னாடு என்னும் யூதாவில் எசாயா இறைவாக்குரைக்கும்போது, சீயோன் பிற்காலத்தில் பெறப்போகும்

பெருமையையும்,முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுகின்றார் (எசா 2:1-5). கடவுளின் கோவில் அமைந்துள்ள சீயோன் மலையின் பெருமையை எல்லா மக்களும் அறிந்துகொள்ளும் காலம் எதிர்காலத்தில்,வரும் என்று அவர் நவில்கின்றார். கடவுள் தம் திருச்சட்டத்தையும், திருவாக்கையும் சீயோனில் வெளிப்படுத்தி, தம் வழிகளை மக்களுக்குப் பிறழாமல் கற்பிப்பார் என்று எசாயா அறிவிக்கின்றார். சீயோனில் வந்தடையும் மக்கள் தங்களின் உள்ளங்களில் நிறைவான அமைதியையும் மகிழ்ச்சியையும் அனுபவிப்பார்கள் என்பது எசாயாவின் முழு நம்பிக்கை (எசா 2:4). சீயோன் என்றும், தாவீதின் நகரம் என்றும் அழைக்கப்படும் எருசலேமை நோக்கி மக்கள் வருவார்கள் என்று இறைவாக்கினர் எசாயா சொல்லும்போது, தாவீதின் மகனாகிய இயேசுவிடமிருந்து உண்மையை அறிவதற்கு மக்கள் வருவார்கள் என்று நாம் பொருள் கொள்ளலாம். இஸ்ரயேலின் மெசியா தாவீதின் வழியில் வருவார் என்னும் உண்மை நாத்தான் இறைவாக்கினர் மூலம் கடவுளால் அறிவிக்கப்பட்டு (2 சாமு 7:1-16), எசாயா போன்ற இறைவாக்கினர்களால் மீண்டும் உறுதி செய்யப்படுவதைப் பார்க்கிறோம் (எசா 11:1-9). இயேசு தாவீதின் மகன் என்று வருணிக்கப்படுகின்றார் (மத் 1:1; மாற் 10:47).

எபூசியர்களிடமிருந்து தாவீது கைப்பற்றிய எருசலேம், தாவீதுவின் மகன் இயேசுவால் சிறப்புறப் போவது குறித்து எசாயா கனவு கண்டார். அந்தக் கனவு படிப்படியாக நனவாகியது. இயேசுவின் பணிக்காலத்தில் சீயோன் என்கிற எருசலேம் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தை நம்மால் மறுக்க முடியாது. இயேசு எருசலேமுக்குள் வெற்றி ஆர்ப்பரிப்போடு நுழையும்போது, அதைப் பார்த்து அழுதார் என்று கூறப்பட்டுள்ளது (லூக் 19:41). எதற்காக அவர் அழ வேண்டும்? எசாயா கண்ட கனவை நனவாக்காமல் வாழ்ந்த மக்கள்மீது கொண்ட பரிதாபத்தினால் இயேசு அழுதார் என்று நாம் புரிந்து கொள்ளலாம். இயேசுவின் மண்ணுலகப் பணி முற்றுப் பெற்றதும்,தந்தையாகிய இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றும் நோக்குடன் சிலுவை மரணத்திற்கு இயேசு தன்னை அர்பணித்துக் கொண்டது சீயோனில்தான். இயேசுவைச் சிலுவையில் அறைவதற்காக படைவீரர்களை நடத்தி வந்த நூற்றுவர் தலைவர் அவரது மரணத்தைப் பார்த்து, மனமாறி, இவர் உண்மையாகவே நேர்மையாளர் (லூக் 23:47) என்று பகிரங்கமாக அறிவித்து சீயோனில்தான். இயேசுவின் இறப்பு, உயிர்ப்புக்குப்பின் அவர் விண்ணகப் பயணம் மேற்கொள்ள இருந்த வேளையில் தம் திருத்தூதர்களைப் பார்த்து, தந்தை வாக்களித்த வல்லமை உன்னதத்திலிருந்து வரும் வரை எருசலேமில் இருக்கு மாறு கட்டளை யிடுகின்றார் (லூக் 24:49). பெந்தக்கோஸ்து



விழாவின்போது, பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த மக்கள்(திப 2:5,7-11) முன்னிலையில் தூய ஆவியானவர் திருச்சபையின் மீது இறங்கி வந்த நிகழ்ச்சி நடைபெற்றது எருசலேம் என்கிற சீயோனில் தான் (திப. 2:1-4). இயேசுவின் காலத்திற்குப்பின் முதன் முறையாக மறைபரப்புப் பணி தொடங்கப்பட்டதும் சீயோனில்தான் (திப 2:14-36). பேதுருவின் முதல் பேருரையைக் கேட்டு, இயேசுவின் பெயரால் மூவாயிரம்பேர் திருமுழுக்குப் பெற்றது சீயோனில்தான் (திப 2:41). எடுத்துக்காட்டான வாழ்க்கையை கிறிஸ்தவர்கள் முதலாவதாக வாழ்ந்து காட்டியது சீயோனில்தான் (திப 2:42-47). தொடக்ககாலத் திருச்சபையைத் தாக்கிய மிகப் பெரிய பிரச்சனையை தூய ஆவியின் துணைகொண்டு, திருச்சபையின் தலைவர்கள் தீர்த்துக்கொண்டதும் சீயோனில் தான். (திப 15). சீயோன் என்கிற எருசலேம் குறித்து எசாயா கண்ட கனவு படிப்படியாக நனவாகி, அதன் பெருமை பலராலும் உணரப்பட்டதை யாரும் மறுக்க முடியாது.

திருச்சபை நமக்கு அறிவித்துள்ளத் திருவருகைக் காலத்தில் கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ச்சிக்காக நம்மை நாம் தயாரிக்க வேண்டும் என்பது திருச்சபையின் எதிர்பார்ப்பு. இயேசுவின் பிறப்பினால் மக்கள் அனுபவித்த மகிழ்ச்சி, அமைதி போன்றவற்றை நாம் அனுபவிப்பதோடு, பிறரையும் அனுபவிக்கத் தூண்ட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. சீயோனின் பெருமையை மேலே பார்த்தோம். உலகில் கடவுளுக்கு உகந்தோருக்கு அமைதியை வழங்க வந்த இயேசுவின் பிறப்பின் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டு தேடி, வந்தவர்களுக்கு உள்ளத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்பட வழி செய்யப்பட்டது எருசலேம் என்கிற சீயோனில் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இயேசு பிறந்த வேளையில் அதிசய விண்மீனை ஆகாயத்தில் கண்ட கீழ்த்திசை ஞானிகள் (மத் 2:2),வழி தெரியாமல் சீயோன் என்கிற எருசலேமில் விசாரித்த போது, அங்கிருந்த தலைமைக் குருக்களும், மறை நூலறிஞர்களும், பெத்லகேமில்தான் மெசியா பிறப்பார் என்று தெரிவிக்கின்றனர் (மத் 2:4-6). அங்கு வந்த ஞானிகள் யூதர்களும் அல்ல, யூதப் பாரம்பரியத்தைப் பற்றி அறிந்தவர்களும் அல்ல. அமைதியின் நாயகனைத் தேடி வந்த அவர்கள், அமைதி சமர்பித்து, அவரை அரசராகவும்,கடவுளாகவும் அங்கீகரித்து, பிற்காலத்தில் அவர் நிறைவேற்றப் போகும் தியாக மரணத்தையும் சுட்டிக்காட்டி, மன நிறைவுடன் திரும்பிச் சென்றனர். சீயோனுக்கு வரக்கூடிய மக்களினங்கள் நல்லறிவு பெற்றவர்களாய், உள்ளத்தில் அமைதியையும், மகிழ்ச்சியையும் அனுபவித்துச் செல்வர் என்று எசாயா கண்ட கனவை நனவாக்கிய பெருமை சீயோன் என்கிற எருசலேமுக்கு உண்டு என்று சொன்னால் அது மிகையல்ல.

திருவருகைக் காலத்தில் நாம் உணர வேண்டியது இதுதான். நாம் சீயோனாக மாற வேண்டும். மன அமைதி தேடி வந்த பிற இனத்தாராகிய கீழ்த்திசை ஞானிகளுக்கு அமைதியின் தலைவர் இருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டியது சீயோன்தான். உள்ளத்தில் வெறுமையுடனும், மகிழ்ச்சியற்றவர்களாய், விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட நிலையில் நம்மிடம் வரும் மக்களுக்கு, நாம் சீயோனாக இருந்து தேற்றி, அவர்களுக்கு நல் அறிவைக் கொடுத்து, அமைதியின் வழியைச் சுட்டிக்காட்டும் கடமை நமக்கு இருப்பதை உணரத் திருவருகைக் காலம் நம்மை அழைக்கிறது. ஆகவே இயேசுவை பின் பற்றும் ஒவ்வொருவரும் சீயோனாக மாற வேண்டிய அவசியம் உள்ளது.

## கடந்த மாத கேள்வி-பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| D.ஜோஸ்பின் மேரி தாசன் | கவரப்பேட்டை |
| W. பெமிலா வில்சன் | கவரப்பேட்டை |
| M. அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை |
| U.பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை |
| S.கீதா சுரேஷ் | கவரப்பேட்டை |
| A. அன்ன புஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை |
| T. சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை |
| A. ஜோஸ்பின் அபிஷியா | கவரப்பேட்டை |
| A. ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை |
| U. எல்ஸி தினேஷ் | கவரப்பேட்டை |
| U.இமாகுலேட்சியோனா | கவரப்பேட்டை |
| U.ஆண்டனி அருண்ஜோசப் | கவரப்பேட்டை |
| A.அனுஷா அகஸ்டின் | கவரப்பேட்டை |
| D.கலா சகாயம் | கவரப்பேட்டை |
| S.ரீட்டா யோவான் | கவரப்பேட்டை |
| A.பாக்கியலெட்சுமி ஆறுமுகம் | கவரப்பேட்டை |
| லூர்து மேரி தேவசகாயம் | பிரகாசபுரம் |
| S.மலர்விழி செல்வகுமார் | தி.க. குன்றம் |
| A. தெரஸ்லின்ராஜன் | பொற்றை |
| A. ஜான்ஸி சேகர் | பொற்றை |
| G. ரெஜினாள் மேரி | பொற்றை |
| S.மேரி லீலா | பொற்றை |
| A. சகாய லீன் நர்மதா | தோப்புவிளை |
| கபிரியேஸ் மேரி | பொற்றை |
| குயின் ரோஸ் பாக்கியம் | பொற்றை |
| மிக்கேல்ராஜ் மேகலா | மணப்பாடு |
| P. சந்தணதிரவியம் | பொற்றை |
| M.டேவிட்தேவராஜன் | வெள்ளகோவில் |
| J.டாம்சந்த் | பொற்றை |
| A.கரோலின் சிறுமலர் | கொழுந்தட்டு |
| S.நிர்மலா சந்தியாகுராஜன் | மார்க்கம்பட்டி |
| D.அந்தோனி ஏசுதாசன் | பொற்றை |
| P.மேரி பிரின்ஸிலா | பொற்றை |
| S.G.மேரி சரோஜா | சென்னை |
| A.மேரி ஈலினி | பொற்றை |
| A.ஜெரிஷ் அந்தோணி ஜாக்சன் | பொற்றை |
| A.அந்தோணி ஷைனி | பொற்றை |
| A.பிரான்சிஸ்பிரபா | பொற்றை |
| M.டேவிட் லியோன் | பொற்றை |
| S.சிலுவை அந்தோணி | பொற்றை |
| A.மரிய மிக்கேல் ஜெபர்சன் | பொற்றை |
| A.பாத்திமா மேரி | கொழுந்தட்டு |
| A.ஜெய பவித்ரா | கொழுந்தட்டு |
| A.நேவிஸ் பிரதீபா | கொழுந்தட்டு |
| G. பூபால் | மதுரை |
| A.மரியலிட்வின் | அடைக்கலாபுரம் |
| D.ஜாக்கலின் டென்சன் | வெள்ளகோவில் |
| ஜெபஆஷா | வெள்ளகோவில் |
| M.ஆகாஷ்துரை | வெள்ளகோவில் |
| யூஜின் கெவின் | வீ.பா.பட்டணம் |
| பினோஜ் பிரின்ஸ் | தூத்துக்குடி |
| J.பீட்டர் ஜோசப் | சென்னை |
| ஜோஸ் பிரகாஷ் | பொள்ளாச்சி |
| ரேஸ்மா ஜெப்ரின் | திருச்சி |
| J.சுதா ராஜா | திருவான்மியூர் |
| P.ஸ்டெல்லாபீட்டர் | மாதர்பாக்கம் |
| A.மரிய மெர்லின் | அடைக்கலாபுரம் |
| J.சாரோன் அருள்ராஜ் | நாகர்கோவில் |
| S.மரிய செல்லம்மாள் | பொற்றை |
| J.புனிதா ஜெயக்குமார் | பொற்றை |
| A.சகாய ஜெனிலா | பொற்றை |
| D.ஜெலஸ்டி மோனிகா | பொற்றை |
| V.P.S.பிரமிளா | சென்னை |
| J.வான்மதி ஜேசுதுறை | சென்னை |
| மெரிஷா வளன் | நாகர்கோவில் |
| மெரின் வளன் | நாகர்கோவில் |
| G.ஜான் ஷீலா | ஏர்வாடி |
| A.R.வியான்ஜெய் போனேஷா | திருச்செந்தூர் |
| E.ஜெயசீலி பாத்திமா | தூத்துக்குடி |
| M.ஜோஸ்பின் அமுதா | திருச்சி |
| J.ஜோஸ்லின் | கோட்டபட்டி |
| A.கருணாகரன் | கோவளம் |
| S.ஜோஸ்லின் | பொற்றை |
| சிறிய புஷ்பம் | பொற்றை |
| R.வெனிஷ்டா ராஜேஷ் | ஏரல் |

## கடந்த மாத விவிலிய விடைகள்

1. பித்தோம், இராம்சேசு
2. சிப்ரா, பூவா
3. நன்மை
4. சிப்போரா
5. கேர்சோம்
6. ஓரேபை
7. ஆரோன்
8. தலைப்பிள்ளை
9. வைக்கோல்
10. எண்பது
11. ஈக்களாவ்
12. கல்மழை
13. வெட்டுக்கிளிகள்
14. காரிருள்
15. இறைச்சியை
16. புளித்த மாவு
17. தலைப்பேறு
18. உவர்ந்த தரையில்
19. விவிக்கை
20. ஆண்டவர்

# இல்லத்தில் இடமுண்டு

அன்று அந்த நடுநிலைப்பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வந்தது. எங்கு நோக்கினும் நட்சத்திரங்கள் மின்விளக்குகளின் ஒளியில் பிரகாசித்தன. இடையர்கள் போல வேடமணிந்த மாணவர்கள் அங்குமிங்கும் ஆட்டுக்குட்டிகளுடன் நடமாடிக் கொண்டிருந்தார்கள். இன்னும் சில நிமிடங்களில் கிறிஸ்துமஸ் நாடகம் அரங்கேறவுள்ளது. நாடகத்தில் பொறுப்பேற்ற மாணவ மாணவிகளை பயிற்றுவித்த ஆசிரியர் ஜான் பரபரப்புடன் காணப்பட்டார். பள்ளியின் தலைமை ஆசிரியர் ராபர்ட் அவரிடம், என்ன ஜான் பெற்றோர்கள் எல்லாம் வந்தாகிவிட்டது, ஊர் மக்களும் அதிகமாய் வந்துவிட்டார்கள் நாடகத்தை ஆரம்பிக்கலாமா? என்று கேட்டார்.

ஆசிரியர் ஜான் அதற்கு மறுமொழியாக, ஐயா நாடகத்தில் நடிக்க வேண்டிய எல்லா மாணவர்களும் வந்து ஒரு வெள்ளோட்டம் பார்த்துவிட்டார்கள். அனால் விடுதி காப்பாளனாக நடிக்க வேண்டிய மாணவன் மட்டும் வரவில்லை. அவன் வரவும் மாட்டான். அதனால் தான் என்ன செய்வது என்று யோசிக்கிறேன் என்றார். அப்படியென்றால் அந்த விடுதி காட்சியை மட்டும் நீக்கிவிடுவோமா? என்று ராபர்ட் ஜானிடம் கேட்டார். அதற்கு ஜான், வேண்டாம் ஐயா, அந்த காட்சிக்காக விடுதி கட்டிட அமைப்பு, அதன் கதவு எல்லாம் அதிக செலவு செய்து தயாரித்து வைத்திருக்கிறோம். அதை நீக்க வேண்டாம். நான் வேறொரு மாணவனை அதற்கு தயாரித்து விடுகிறேன் என்று கூறிய வண்ணம் சுற்றும் முற்றும் பார்த்தார்.

அங்கே ஆறாம் வகுப்பு மாணவன் சுந்தர் ஒரு பலூனை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். கடந்த வாரம் கிறிஸ்துமஸ் நாடகத்திற்கு மாணவ மாணவிகளை தேர்வு செய்யும் போது இந்த சுந்தரும் வந்திருந்தான் ஆனால் அவனுக்கு நடிக்கக் கொடுக்க எந்த பாத்திரமும் இல்லாத காரணத்தால் ஜான் அவனை நாடகத்தில் சேர்க்கவில்லை. சுந்தரைப் பார்த்ததும் ஆசிரியர் ஜானுக்கு மகிழ்ச்சி. சுந்தர் இங்கே வா என்று அழைத்தார். உடனே சுந்தர் கையிலிருந்த பலூனை கீழே போட்டுவிட்டு அவரிடம் ஓடி வந்தான். சுந்தர், நம்முடைய கிறிஸ்துமஸ் நாடகத்தில் நடிக்கிறாயா? என்று ஜான் அவனிடம் கேட்டார். சுந்தரின் முகம் மகிழ்ச்சியில் பிரகாசித்தது. துள்ளிக் குதித்து மகிழ்ச்சியுடன் சம்மதித்தான்.

ஆசிரியர் ஜான் சுந்தரை தனியாக அழைத்துச் சென்று அவன் பேச வேண்டிய வசனத்தை அவனுக்கு கற்றுக்கொடுத்து அவனுக்கு யூதர்களின் ஆடையை அணிவித்தார். தலைமை ஆசிரியர் ராபர்ட் விரைந்து வந்து, ஜான், உடனே நாடகத்தை தொடங்கவேண்டும்.விடுதி காப்பாளனுக்கு என்ன செய்தீர்கள்? என் கேட்டார். ஐயா, ஆறாம் வகுப்பு மாணவன் சுந்தரை தயார்படுத்தி விட்டேன். நாடகத்தை ஆரம்பிப்போம் என்று ஜான் கூற கிறிஸ்துமஸ் நாடகம் இனிது ஆரம்பமானது.

முதலாவது காட்சியில் கபிரியேல் தூதர் கன்னி மரியாளுக்கு காட்சி தந்து அண்டவரின் வருகையை கூறுகிறார். மாணவ மாணவிகளின் தத்ரூபமான ஒப்பனை, உடைகள் நடிப்பு, வசனம் பேசுதல் எல்லாம் அபாரமாக நடந்தேறியது. ராபர்ட் ஜானைப் பார்த்து புன்னகைத்தார்,அடுத்தடுத்த காட்சிகள் அருமையாய் அமைந்தன. அடுத்து சுந்தர் நடிக்க வேண்டிய காட்சி. யோசேப்பும் கன்னி மரியாளும் வெகுதூரம் பயணித்து சோர்வுடன் பெத்தலகேமை அடைகின்றனர். அங்கு ஓர் விடுதியில் இடம் கேட்டு அதன் வாசலில் நிற்கின்றனர் .

தலைமை ஆசிரியர் ராபர்ட், ஜான் ஆசிரியரை திரும்பிப் பார்த்து, சுந்தர் நடித்து விடுவானா? என்று கேட்டார்.அதற்கு ஜான், விடுதியில் இடமில்லை. வேறு இடம் செல்லுங்கள் என்று கூறிவிட்டு கதவை அடைக்க வேண்டும். இதை செய்துவிடமாட்டானா? என்று கூறி சிரித்தார். விடுதி காப்பாளன் சுந்தர் விடுதியின் கதவை திறந்து கொண்டு



வெளியே வந்தான். சோர்ந்து களைத்துப் போய் வந்திருக்கும் கன்னி மரியாளையும் யோசேப்பையும் பார்த்தான். அவனால் பேச முடியவில்லை. அவனது கண்களில் மெதுவாக கண்ணீர் பெருகியது. காலம் கடந்து செல்வதை கவனித்த ஆசிரியர் ஜான், 'சுந்தர், இடமில்லை' என்று திரும்பத் திரும்ப மேடையின் மறைவிலிருந்து கூறினார். சுந்தருக்கோ அந்த வார்த்தையை சொல்ல இயலவில்லை.

பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் நிசப்தமாகிவிட்டது. அனைவரும் சுந்தரின் முகத்தையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆசிரியர் ஜானுக்கு கடுங்கோபம். 'எவ்வளவு நேரம்டா இப்படியே நிற்பாய்?, இடமில்லை என்று சொல்லி கதவை மூடுடா' என்று கத்தினார். தலைமை ஆசிரியர் ராபர்ட், 'இந்த ஒரு வார்த்தையை சொல்ல முடியாத மண்டுதான் உங்களுக்கு கிடைத்தானா?' என்று கோபத்துடன் ஜானை முறைத்தார். சுந்தரோ கண்கள் சிவக்க கண்ணீர்மல்க வாயடைத்துப்போய் சிலையாய் நின்றான். பள்ளியின் ஆசிரியைகள் அனைவரும் மேடை அருகில் வந்து இடமில்லை என்று சொல்லும்படி சுந்தரை வற்புறுத்தினார்கள். பார்வையாளர்களோ அசாதாரண அமைதியுடன நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சுந்தரை மேடையை விட்டு வெளியே இழுத்துப் போட வேண்டும் என் எண்ணத்துடன் தலைமை ஆசிரியர் எழுந்தார். அப்போதுதான் சுந்தர் பேச ஆரம்பித்தான்.

சுந்தர் கண்ணீர்மலக கன்னி மரியாளை ஒரு கரத்திலும் யோசேப்பை மறுகரத்திலும் பற்றிக் கொண்டு இங்க எல்லாரும் இடம் இல்லைன்னு சொல்றாங்க. நீங்க எங்க வீட்டுக்கு வாங்க என்று கூறினான். ஆசிரியர் ஜான் அதைக் கேட்டு தன் கையிலிருந்த நாடக ஏட்டை தவறவிட்டவராக எழுந்து நின்றார். அவரது கண்கள் குளமாகின. அதிர்ச்சியில் உறைந்த பார்வையாளர்களின் கண்களில் எல்லாம் கண்ணீர் நிறைந்தது. கோபத்துடன் வந்த தலைமை ஆசிரியர் சுந்தரை இறுகத்தழுவிக் கொண்டார். அவரது கண்களிலும் கண்ணீர் பொங்கியது. பார்வையாளர்களைப் பார்த்து தலைமை ஆசிரியர், "அன்பர்களே! நாடகத்தில் கூட சுந்தரால் இயேசுவுக்கு இடமில்லை என்று கூற முடியவில்லை. விடுதியில் இடமில்லாவிட்டாலும் என் இல்லத்தில் இடமுண்டு என்று இயேசுவை அழைத்தான் பார்த்தீர்களா?, இது நமக்கெல்லாம் ஒரு படிப்பினை. இயேசு பிறக்க நம் இல்லத்தில் இடம் உண்டா?" என்று கேட்டார் பார்வையாளர்கள் அனைவரும் "ஆம்!" என் கூறி ஆரவாரத்துடன் கைதட்டினர். – **த. பீட்டர் அந்தோணி ராஜ்,** ஆசிரியர், பொற்பை



# திருமணவரம் தரும் கல்யாணத்தாய்

நம்தாய் கொடுக்கும் திருமண வரத்தைப்றி நான் உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். அதில் மூன்று திருமணங்களை பற்றி.அது எங்கேவைத்து எப்படி ஒப்பந்தம் செய்தார்கள் என்பதை பற்றி நான்உங்களுக்கு கூறுகிறேன். நான் தொழில் விசயமாக பக்கத்து கிராமங்களுக்கு செல்வதுண்டு. அப்போது ஒரு நாள் எனக்கு நன்றாக தெரிந்தவர், என் மகளுக்கு நல்ல மாப்பிள்ளை இருந்தால் பார்த்து சொல்லுங்கள் நீங்கள் பார்த்தால் நல்ல பையனாக பார்ப்பீர்கள் என்று சொன்னார் நானும் சரி என்று சொன்னேன். ஒருவாரம்கழித்து அதே போல் எனக்கு நன்றாக தெரிந்தவர் ஒருவர் என் பையனுக்கு நல்ல பெண் ஒன்று பாருங்கள் என சொன்னார். எனக்கு உடனே ஒரு வாரத்திற்கு முன்னால் சொன்ன அந்த மாப்பிள்ளை பையன் வீட்டார் ஞாபகம் வந்தது. நான் உடனே அவர்களிடம் அந்த ஊரையும்,அவர்களுடைய பெயரையும் சொன்னேன். அவர்கள் எனக்கு நன்றாக தெரிந்தவர்கள் கேட்டு சொல்லுங்கள் என்று சொன்னார், நான் அவர்களிடம் கேட்டேன் அவர் சரிபார்போம் என்று ஒப்பு கொண்டார்கள் உடனே மாப்பிள்ளையையும், பெண்ணும் எங்கே சந்திப்பது என்று முடிவு பண்ணி அடுத்தவாரம், எங்கள் ஊரில் முதல் சனி வழிபாடு நடைபெறும் இரண்டு குடும்பத்தாரும் அங்கே வந்துவிடுங்கள் என்று சொல்ல, சப்பர பறை முன்னால் வந்து விடுங்கள் நான் அங்கேதான் நிற்பேன் என்று சொன்னேன். அதேபோல் அவர்களும்,(நம் கிறிஸ்தவர்களே) திருப்பலியிலிருந்து மதிய சாப்பாட்டை முடித்துவிட்டு சப்பறை முன்னால் வந்தார்கள். இரண்டு குடும்பங்களும் சந்தித்து மாப்பிள்ளை பெண் சம்மதத்தோடு நம் கல்யாணத்தாயின் ஆசீர் பெற்று ஒரு மாதத்திற்குள் திருமணம் நடைபெற்றது. இதே போல் மேலும் இரண்டு திருமணங்களும் நம் தாயின் ஆலயத்திற்கு வர சொல்ல மாப்பிள்ளையும் பெண்ணும் சந்தித்து இரு குடும்பத்தார் சம்மதத்தோடு திருமணம் அவரவர் ஊர்களில் சிறப்பாக நடைபெற்றது, இதேபோல் எத்தனையோ குடும்பத்தார்கள் என்னிடம் சொல்வார்கள். நான் அவர்களிடம் திருமணவரம் தரும் திருகல்யாண மாதா ஆலயத்தில் வந்து மெழுகுதிரியில் ஒளியேற்றி முழந்தாளிட்டு அந்த தாயிடமும், மகனிடமும் அழுது மன்றாடி உருக்கமாக ஜெபியுங்கள்.நம் தாயும் மகனும் நமக்கு நிச்சயமாக குறைகளை தீர்த்துவைப்பார்கள். தாயின்றி மகனில்லை மகனின்றி தாயில்லை, அதுதான் உண்மையான கிறிஸ்தவம். அதேபோல் எத்தனையோ பேர்களுக்கு நம் தாயும் மகனும் சேர்ந்து திருமணங்கள், குழந்தை பாக்கியம் மற்றும் வியாதி துன்பங்கள் கஷ்டங்கள், குடும்ப சமாதானங்கள், பில்லி சூனியங்களிலிருந்து விடுதலை அனைத்தும் நம் திருகல்யாணமாதா ஆலயத்தில் அற்புதமாக நடந்து கொண்டிருக்கிறது. நம் மாதாவைப் பற்றி சொல்லும் போது நம் அனைவருக்கும் பெருமையாக இருக்கிறது. இவ்வாறு இதை ஒரு சாட்சியாக எழுத வைத்த இறைவனுக்கு கோடான கோடி நன்றி! சிரம் தாழ்த்தி சொல்லுகிறேன். மாதாவுக்கு நன்றி.

– **இருதயராஜ்,** பொற்பை.

# கிறிஸ்துமஸ் ஒரு மீட்பரின் நற்செய்தி

**கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு:-**
(லூக் 1:26-37, மத் 1:20-23, ஏசா 7:14)

அகில உலகத்தையும் படைத்து காத்து வரும் இறைவன் நம்மை பாவத்திலிருந்து மீட்பதற்காக என்றும் கன்னியான அருள்மிக பெற்றவளான அன்னை மரியாளின் திருவயிற்றில் கருத்தரித்து மனிதனாக பிறக்கப்போகிறார் என்று கபிரியேல் என்னும் வான தூதரால் முன்னறிவிக்கப்பட்டது.

**மரியாளின் மீட்பு பணி :-** (லூக் 1:39-56)

இறைமகன் இயேசு பரிசுத்த ஆவியின் வல்லமையால் தன் வயிற்றில் கருவாகி மனிதனாக பிறக்கப்போகிறார் என்றவுடன் மரியாள் தன்மையே தாழ்த்தி இறைவனின் மீட்பு பணியில் தானும் பங்கேற்கிறாள். எலிசபெத் துக்கு பணிவிடை செய்வதற்காக கரடுமுரடான வழிகளை கடந்து சென்று தன் பணியை துவங்குகின்றாள். ஆண்டவரின் தாய் தனக்கு பணிவிடை செய்ய வந்துள்ளதை நினைத்து எலிசபெத் கடவுளை போற்றி புகழ்கின்றாள்.

**இயேசு கிறிஸ்துவின் பிறப்பு :-** (லூக் 2:1-7)

அகிலம் படைத்த ஆண்டவருக்கே அரச மாளிகையில் இடம் இல்லை. எளிமையின் பிறப்பிடமாம் இறைவன் நாம் ஆடம்பர வாழ்க்கையை துறந்து எளிய வாழ்க்கை வாழ்வதற்காக மாட்டு தொழுவத்தில் பிறந்தார்.

**வான தூதர்கள் சொன்ன நற்செய்தி :-** (லூக் 2:13.14)

வானதூதர்கள் கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு ஒரு மாபெரும் நற்செய்தி என்றும் அவரே நம்மை பாவப்பிடியில் இருந்து மீட்க வந்தவர் என்பதையும் அறிவிக்கின்றனர். வான தூதர் அனைவரும் சேர்ந்து கடவுளை வாழ்த்தி போற்றுகின்றனர்.

**இடையர்களின் சாட்சி :-** (லூக் 2:15-20)

கள்ளகபடமில்லாத ஆட்டிடையர்கள் வானதூதர்களின் அறிவிப்பை கேட்டவுடன் விரைந்து சென்று அவரை வணங்கி. அவரை போற்றி புகழ்ந்து அவருக்கு சாட்சிகளாக விளங்குகின்றனர்.

**இயேசுகிறிஸ்துவின் புகழ்பாடுதல் :-** (லூக் 1:46-55) (லூக் 1:69-75)

ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்வோருக்கு அவர் தன் அபரிமிதமான அன்பை பொழிந்து நலன்களால் நிரப்புகின்றார் என்பதையும் தன் வாழ்வில் உய்த்துணர்ந்து மரியாள் கடவுளை புகமுகின்றாள். செக்கரியாவும் கடவுள் தம்மீது இரக்கம் காட்டியதை உணர்ந்து போற்றி புகழ்கின்றார்.

**ஞானிகளின் காணிக்கை:-** (மத் 2:1-11)

அரசருக்கெல்லாம் அரசராம் கிறிஸ்து அரசர் பிறந்த செய்தி அறிந்தவுடன் யானைகள் தங்களிடம் உள்ள விலையுயர்ந்த பொருட்களை அவருக்கு காணிக்கையாக செலுத்தி அவர் தம் பாதம் பணிந்து தங்களையே அர்ப்பணிக்கின்றார்.

மீட்பர் கிறிஸ்து நம்மில் பிறக்கும் போது நாம் புது மனிதர்களாக மாரிவிடுகிறோம். நம்மில் தாழ்ச்சி,பொறுமை,அன்பு,இரக்கம் போன்ற நற்பண்புகள் நிறைந்து நிறைவான வாழ்வு கிடைக்கின்றது.

HAPPY 'X' MAS

-S. **நிர்மலா ராணி**, மார்க்கம்பட்டி

# இரண்டாம் ஆண்டு இதய அஞ்சலி







## எஸ். சுபாஷ் ஜேம்ஸ் ஒயிட்

தோற்றம்
04.10.1982

மறைவு
16.12.2012

பிரிவால் வாடும்...

தாய் : **கிளாரா மேரி,**

**சகோதரர்கள்**

மற்றும் குடும்பத்தினர்...

பொத்தக்காலன்விளை.



# இதய அஞ்சலி



## I. அன்னத்தாய் அம்மாள்

எண்ணில்லா ஆண்டு எங்களோடு வாழ்வீர்கள்
என எண்ணி இருந்தோம்
கண் சிமிட்டும் நேரத்தில் மின்னலைப்போல் வந்த அழைப்பு
எங்களை திடுக்கிட வைத்தது.
நினையாத நேரத்தில் வந்த திடீர் அழைப்பால்,
எங்களைவிட்டு பிரிந்த உங்களை எண்ணியே வாழ்கிறோம்.
எங்கள் இதயமோ உங்கள் நினைவோடு
விழிகளோ என்றும் கண்ணீரோடு

**என்றும் உங்கள்**

**நினைவில் வாழும்**

**அன்பு மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**


# விண்ணக வாழ்வில்
# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

13.12.2014 அன்று காலை 6.00 மணிக்கு நினைவு திருப்பலி நடைபெறும்

திருக்கல்யாண மாதா ஆலயம், பொத்தக்காலன்விளை







மலர்ந்தது
20.06.1938

உதிர்ந்தது
13.12.2012

## திருமதி. சி.சேசம்மாள்

(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை)

**என்றும் நினைவில் வாழும்....**

கணவர் : **ம.சிங்கராயன்**

ஓய்வு பெற்ற சுகாதார ஆய்வாளர்

முன்னாள் தலைவர், சாஸ்தாவிநல்லூர் ஊராட்சி

| மக்கள் | மருமக்கள் |
|---|---|
| அந்தோணி சகாய ஜஸ்டின் | வாணி |
| வென்சி பிரபா | தேவசகாயம் |
| ரூபட் நேவிஸ் | மேரிரமணி |

**பேரன் பேத்திகள்**

மேரி திவ்யா, கிளாடிஸ் ரேவந்த்

அந்தோணி தாமஸ் ரோசாரியோ

# இதய அஞ்சலி

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்
– யோவா. 11 :25





பொத்தக்காலன்விளை பங்கில் 27வருடங்களாக
உபதேசியாராகவும், பொத்தக்காலன்விளை புனித
வின்சென்ட் தேபவுல் சபையின்
தலைவராகவும்,உறுப்பினராகவும் இருந்து பணி செய்த

## அ. பிரான்சீஸ் அவர்கள்

19.09.2014 ல் இயேசு கிஸ்துவில் நித்திரை
அடைந்தார்கள். அவர்களின் ஆன்ம
இளைப்பாற்றிக்காக மன்றாடுங்கள்.

**தலைவர் மற்றும் உறுப்பினர்கள்**
**புனித வின்சென்ட்தே பவுல் சபை**
பொத்தக்காலன்விளை.

# வாழ்வு தரும் வார்த்தைகள் – டிசம்பர் 2014

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | | எசாயா 2:1-5; | மத் 8:5-11 |
| 2. | | எசா 11:1-10; | லூக் 10:21-24 |
| 3. | புனித பிரான்சிஸ் சவேரியார் | எசா 25:6-10; | மத் 15:29-37 |
| 4. | | எசா 26:1-6; | மத் 7:21.24-27 |
| 5. | | எசா 29:17-24; | மத்9:27-31 |
| 6. | புனித நிக்கோலாஸ் | எசா 30:19-21.23-26; | மத்9:35 10:1.6-8 |
| 7. | திருவருகைக்கால ஞாயிறு | எசாயா 40:1-5.9-11; 2 பேருது 3:8-14; | மாற்கு1:1-8 |
| 8. | மரியாள் அமல உற்பவி | தொ.நூ. 3:9-15.20; எபி 1:3-6.11-12; | லூக் 1:26-38 |
| 9. | | எசா 40:1-11; | மத் 18:12-14 |
| 10. | புனித கிரகோரி | எசா 40:25-31; | மத் 11:28-30 |
| 11. | புனித தாமசுஸ் | எசா 41:13-20; | மத்11:16-19 |
| 12. | குடலூப் மாதா | எசா 48:17-19; | மத் 11:11-15 |
| 13. | புனித லூசி | சீராக்48:1-4.9-11; | மத் 11:16-19 |
| 14. | திருவருகைக்கால ஞாயிறு | எசாயா 61:1-2.10-11; 1தெச: 16-24 | யோவா1:6-8.19-28 |
| 15. | | எண் 24:2-7.15-17; | மத் 21:23-27 |
| 16. | | செப் 3:1-2.9-13; | மத் 21:28-30 |
| 17. | | ஆதி 49:2.8-10; | மத் 1:1-17 |
| 18. | | எரே 23:5-8; | மத் 1:18-24 |
| 19. | | நீதி 13:2-7.24-25 | லூக் 1:5-25 |
| 20. | | எசாயா 7:10-14; | லூக்1:26-38 |
| 21. | திருவருகைக்கால ஞாயிறு | 2சாமு7:1-5.8-12.14.16; உரோ 16:25-27 | லூக் 1:26-38 |
| 22. | | 1சாமு 1:24-28; | லூக் 1:46-56 |
| 23. | | மலா 3:1-4.23-24; | லூக் 1:57-66 |
| 24. | | 2சாமு 7:1-5.8-12.14.16; | லூக் 1:67-79 |
| 25. | கிறிஸ்து பிறப்பு பெருவிழா | எசாயா 52:7-10; எபி 1:1-6; | யோவா 1:1-18 |
| 26. | புனித முடியப்பர் | திப 6:8-10;7:54-59; | மத் 10:17-22 |
| 27. | திருத்தூதர் யோவான் | 1யோவா 1:1-4; | யோவா 20:2-8 |
| 28. | திருக்குடும்பம் | ஆதி 15:1-6-21:1-3; எபி 11:811:12:17-19 | லூக் 2:22-40 |
| 29. | | 1யோவா 2:3-11; | லூக் 2:22-35 |
| 30. | | 1யோவா 2:12-17; | லூக் 2:36-40 |
| 31. | புனித சில்வெஸ்டர் | 1யோவா 2:18-21; | யோவா 1:1-18 |



# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி : விடுதலைப்பயணம் அதிகாரம் 16 முதல் 34 வரை**



1. ஏலீம், சீனாய் இவற்றிற்கிடையேயுள்ள பாலைவனம் எது?
2. ஒருவரை ஒருவர் நோக்கி ----------என்றனர்
3. மாசா என்றும் மெரிபா என்றும் அழைக்கப்பட்ட இடம் எது?
4. யாருடைய நினைவு வானத்தின் கீழிந்து ஒழிக்கப்படும்?
5. கடவுளே என் துணை – என்னும் பொருளை உடைய பெயர் எது?
6. சிலையையோ---------நீ உருவாக்க வேண்டாம்
7. எபிரேய அடிமை எத்தனை ஆண்டுகள் வேலை செய்வான்?



8. --------யாவருக்கும் நீ தீங்கிழைக்காதே
9. --------பார்வையுடைவரையும் குருடராக்கும்
10. எதை வாயினால் ஒலிக்கவும் கூடாது?
11. --------உடைத்துத் தள்ளுவாய்
12. உடன்படிக்கைப் பேழை எந்த மரத்தால் செய்யப்பட வேண்டும்
13. பசும் பொன்னால் ஒரு-----செய்வாய்
14. உறைவிடத்தை மூடும் திரைகள் எத்தனை?
15 விளக்குக்காக கொண்டு வரப்பட வேண்டிய எண்ணெய் எது?
16. நடனக் கலைஞர்கள் என நிணுமிக்கப்பட்ட இருவர் பெயர் என்ன?



17. மோசேயின் உதவியாளராக இருந்தவர் யஸர்?
18. எனது-----உன்னோடு செல்லும்
19. அவர்-----ஒளிமயமாய் இருந்தது
20. மோசே ஆண்டவரோடு பேசச் செல்லும் வரையும் முகத்தின் மேல் மீண்டும் என்ன போட்டுக் கொள்வார்?

– **P.ஆல்வின் அண்ணாமலை,**
தலைமை ஆசிரியர் (ஓய்வு).


**அடுத்த இதழ்**

**திருக்கலயாண தாயின் பெருவிழா சிறப்பிதழாக வெளிவரவிருக்கிறது. இவைகளைப் பற்றிய கருத்துக்கள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் விளம்பரங்களும் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் வந்து**

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-12-2014**

**சந்தாதாரராக ஆகுங்கள் !** **அன்னையின் அருள் பெறுங்கள் !**


**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.08.2014**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். தேவைக்கேற்ப மாலை 4.00மணிக்கும், 6.30 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.
- முதல் சனி தவிர்த்து மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

**இணையூர் வழிபாடுகள்.**

**நவமுதலூர்**

- ஞாயிறுதோறும் ஊர் ஆலயத்தில் மாலை திருப்பலியும், வெள்ளி மாலை புனித மிக்கேல் அதிதூதர் கெபியில் திருப்பலியும் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |

SOLOMON GRAPHICS, TSY. 9788675143

Merry Christmas and Happy new year

